# வானவில்

VAANAVIL

இதழ் 177 | புரட்டாதி 2025

ISSUE 177 | September 2025


# அரசியல் பழிவாங்கல் அபாயத்தை விளைவிக்கும்!




இலங்கையில் தற்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாம் ஆட்சிக்கு வந்தால் யாரையும் பழிவாங்க மாட்டோம் என வாக்குறுதி அளித்தே பதவிக்கு வந்தது.

ஆனால் அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகி இந்த ஒரு வருடத்தில் ஒருவர் பின் ஒருவராக பலர் மீது பழிவாங்கலைத் தொடர்கின்றனர். அப்படி பழிவாங்கலுக்கு உள்ளாகுபவர்கள் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும், அவர்களுக்கு விசுவாசமான அரச அதிகாரிகளும்தான்.

இந்த பழிவாங்கலில் அதி உச்சமானது முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீதான கைது நடவடிக்கை ஆகும்.

ரணில் கைது செய்யப்பட்டமை முற்றுமுழுதான அரசியல் பழிவாங்கல் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

முன்னர் ஆட்சியில் இருந்த ஏனைய தலைவர்களைப் போலவே ரணிலின் ஆட்சியின் போதும் அவரது அரச தலைவர்களும் அதிகாரிகளும் ஊழல், லஞ்சம், மோசடி என்பனவற்றில் ஈடுபட்டவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்கான தார்மீகப் பொறுப்பு அவருக்கும் உண்டு.

ரணில் அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் பல தவறுகளைச் செய்துள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இந்த நடவடிக்கைகள் அவர் காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டவை அல்ல. இது பிரித்தானியர் இலங்கையில் தமது ஆட்சிக் காலத்தில் உருவாக்கிய 'வெஸ்ற்மின்ஸ்ரர்' ஆட்சி முறையின் காரணமாக உருவாகி வளர்ந்து வந்த ஒரு நிலைமையின் தொடர்ச்சியாகும்.

ரணிலை கைது செய்வதற்கு வேறு பல அரசியல் ரீதியான, நிர்வாக ரீதியான, பொருளியல் ரீதியான காரணங்கள் இருக்க, அவர் உத்தியோகபூர்வ அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு வரும் வழியில் இங்கிலாந்தில் நடைபெற்ற தனது துணைவியாரின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டது தனிப்பட்ட நிகழ்வு என்றும், அதற்காக அரச நிதியைப் பயன்படுத்தியது தவறு என்றும் குற்றம் சாட்டியே அவர் தற்போதைய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு, கை விலங்கு போடப்பட்டு, சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க மிக நீண்ட காலமாக அரசியலில் இருக்கிறார். 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாடாளுமன்ற உறுப்பினராகவும், சில தடவைகள் பிரதமராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், ஒருமுறை ஜனாதிபதியாகவும் இருந்திருக்கிறார். அவர் இலங்கையில் உள்ள பெரும் பணக்கார குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். அவரைப் பொறுத்தவரை மனைவியின் பட்டமளிப்பு விழாவுக்கு அரச செலவில் போக வேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஆனால் ஒருவர் நாட்டின் அதியுயர் பதவியான ஜனாதிபதி பதவியில் இருக்கும் போது, அவரதும் அவரது குடும்பத்தினதும் செயல்பாடுகள் அனைத்தும் அரச ரீதியாகவும் உத்தியோகபூர்வமாகவும் பார்க்கப்படுவது மரபாக இருந்து வந்துள்ளது. எனவே, அமெரிக்காவில் இருந்து வரும் வழியில் மனைவியின் பட்டமளிப்பு விழாவில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் பங்குபற்றியது எப்படி தனிப்பட்ட விவகாரத்துக்கு அரச பணத்தைச் செலவழித்தது என்ற அர்த்தத்தில் அடங்கும்.

அப்படிக் குற்றம் பார்த்தால், தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# ஸ்தம்பித்துப்போன பேச்சுவார்த்தை, தொடரும் யுத்தம்

ஓகஸ்ட் 15[ம்] திகதி அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் சந்தித்து பேசியுள்ளனர். இந்தச் சந்திப்பு சர்வதேசப் பதற்றத்தை தணிக்காதாவென இதன் மீது ஒட்டுமொத்த உலகின் கவனம் இருந்தது. 3 மணி நேரம் நீடித்த இந்த பேச்சுவார்த்தையில், அமெரிக்க-ரஷ்ய உறவு மற்றும் உக்ரைன் போர் குறித்து பேசப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. எனினும் உக்ரைன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான எந்தவொரு உடன்பாடும் எட்டப்படவில்லை.

பேச்சுவார்த்தையின் பின்னர் ட்ரம்பும் புட்டினும் கூட்டாக செய்தி அறிவிப்பை வாசித்தனர். இந்த அறிவிப்பில், புட்டின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு ட்ரம்பை மொஸ்கோவிற்கு வருமாறு அழைத்ததைத் தவிர, பேச்சுவார்த்தையால் ஏற்பட்ட ஆக்கப்பூர்வமான விளைவுகள் பற்றி எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை. இருவரும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவில்லை. புட்டினுடனான பேச்சுவார்த்தைபற்றி உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி உட்பட ஐரோப்பிய ஒன்றியம்-நேட்டோ நாடுகளின் தலைவர்களுக்கு தெரிவிப்பதாக ட்ரம்ப் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் கூறியிருந்தார்.

இந்நிலையில், 18.08.2025 அன்று உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ட்ரம்ப்பை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். இந்த சந்திப்பினைத் தொடர்ந்து, ட்ரம்ப் தனது சமூக வலைதள பதிவின் மூலமாக புட்டின் மற்றும் ஷெலன்ஸ்கிக்கு இடையே போர்நிறுத்தம் தொடர்பாக நேரடி பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளைத் தொடங்கியுள்ளதாக அறிவித்திருந்தார்.

போரில் பலத்த இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் உக்ரைனுக்கு போர்நிறுத்தமென்ற இடைவெளி அவசியம் தேவைப்படுகின்றது. இந்த போர்நிறுத்த காலத்தில் உக்ரைனை இராணுவ ரீதியாக பலப்படுத்தி, ரஷ்யாவிற்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்தலாம் என்பது நேட்டோ நாடுகளின் திட்டமாகவும் உள்ளது. இதனை ரஷ்யா நன்கு புரிந்து வைத்துக் கொண்டுள்ளது. அதனாலேயே யுத்தத்திற்கான காரணங்களைக் களைந்து, நிரந்தரத்தீர்வினை எட்டிய பின்னரே போரை நிறுத்துவது தொடர்பாக பேசலாம் என்பது ரஷ்யாவின் நிலைப்பாடாக உள்ளது. எனவே போர்நிறுத்தம் தொடர்பாக 'புட்டின்– ஷெலன்ஸ்கி நேரடி பேச்சுவார்த்தை' என்ற ட்ரம்பின் அறிவிப்பு, அவரது வழமையான ஊடக வித்தையேயன்றி வேறொன்றுமல்ல.

ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின்போது ட்ரம்ப், உக்ரைனின் போரை 'பைடனின் போர்' என்றும், தான் பதவிக்கு வந்தவுடன் 24 மணி நேரத்தில் உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்றும் கூறினார். பின்னர் பதவிக்கு வந்தவுடன், 100 நாட்களில் உக்ரைன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவேன் என்றார். அவ்வாறு கூறி 8 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், யுத்தத்தை நிறுத்துவதற்கான எந்த சமிக்ஞையும் தென்படவில்லை.

உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்கா நிறுத்தினால், இலகுவாக உக்ரைன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரலாம். உக்ரைனுக்கு உதவி அடிப்படையில் பைடன் நிர்வாகம் ஆயுதங்களை வழங்கியதை எதிர்த்த ட்ரம்ப், அந்த உதவியின் ஒருபகுதியை கடனாக மாற்றினாரேயன்றி, உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதைத் தொடர்கிறார். ஆனால் ஆயுதங்களை நேரடியாக உக்ரைனுக்கு வழங்குவதற்கு பதிலாக, நேட்டோ நாடுகள் அமெரிக்காவிற்கு பணம் செலுத்தி ஆயுதங்களை வாங்கி உக்ரைனுக்கு வழங்க வேண்டுமென்பதே ஆயுத விநியோகம் தொடர்பாக ட்ரம்ப் ஏற்படுத்தியுள்ள மாற்றம்.

உக்ரைன் யுத்தம் தொடர்பாக ட்ரம்ப் தலைமையிலான தற்போதைய அமெரிக்க வெள்ளைமாளிகை நிர்வாகத்திற்கும் ஐரோப்பிய ஒன்றிய–நேட்டோ நாடுகளுக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக வெளிப்படையாகத் தெரிகின்றது. அதாவது ட்ரம்ப் யுத்தத்தை நிறுத்த விரும்புவதாகவும் ஐரோப்பிய நேட்டோ நாடுகள் அதனை விரும்பவில்லை என்ற மாதிரியான தோற்றப்பாடு உருவாகியுள்ளது. அலாஸ்காவில் ட்ரம்ப்–புட்டின் சந்திப்பினை கூட ஐரோப்பிய நேட்டோ நாடுகள் வரவேற்கவில்லை. அதேபோலவே, அமெரிக்காவின் நவபழமைவாதப் பிரிவினரும் ரஷ்யா தோற்கடிக்கப்படும்வரை யுத்தம் தொடர வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார்கள்.

ட்ரம்ப் புட்டினுடன் அலாஸ்காவில் நடத்திய சந்திப்பானது அமெரிக்காவிற்கு உள்ளே எழுந்திருக்கும் நெருக்கடியின் வெளிப்பாடே என்பதை மறுக்க முடியாது. உக்ரைன்–காஸா யுத்தங்கள் மற்றும் சீனா, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியால், அமெரிக்காவின் பொருளாதாரம் சரிந்து கொண்டிருக்கின்றது. இந்தச் சரிவை தற்காலிமாகவேனும் தடுப்பதற்கு, இரண்டில் ஒரு யுத்தத்தை நிறுத்த வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா உள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக உக்ரைனில் நடத்திய போரில் தோல்வியடைந்த அமெரிக்கா, இப்போது வேறு வழியில்லாமலேயே அலாஸ்காவில் ரஷ்யாவுடன் பேசுவதற்கு முன்வந்தது. (உக்ரைன் போரில் ரஷ்யாவைத் தனிமைப்படுத்தி, புட்டின் அரசை வீழ்த்தும் அமெரிக்காவின் திட்டம் முற்றிலும் தோல்வியடைந்துள்ளது. நேட்டோ நாடுகள் பல பில்லியன் கணக்கான டொலர்கள் செலவிட்டு, ஆயுதங்களை அனுப்பியும் ரஷ்யாவைத் தோற்கடிக்க முடியவில்லை.) ஆனால் அந்த பேச்சுவார்த்தையும் எந்தவிதப் பலனையும் அளிக்கவில்லை.

இவ்வருடம் ரஷ்யா, உக்ரைன் இடையிலான அமைதிப் பேச்சு வார்த்தைகள் துருக்கி நாட்டின் தலைநகர் இஸ்தான்புல்லில் 3 சுற்றுகளாக நடைபெற்றன. எனினும் இப்பேச்சுவார்ததைகளில் எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை. இந்நிலையில், 12.09.2025 அன்று உக்ரைனுடனான அமைதிப் பேச்சு நிறுத்தப்பட்டுள்ளது என்று ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, உக்ரைன் யுத்தத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கான சகல வழிகளும் தற்போதைக்கு மூடப்பட்டுள்ளன என்பதையே சொல்கின்றது.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# நேபாள அரசியல் நெருக்கடி: ஓர் ஆய்வு

இமயமலைச் சரிவுகளில் அமைந்துள்ள நேபாளம் 2025 செப்டம்பரில் தனது வரலாற்றிலேயே மிகக் கடுமையான அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டது. இந்த நெருக்கடியை புரிந்துகொள்ள 1996 பெப்ரவரியில் பிரச்சந்தா (புஷ்பகமல் தஹால்) தலைமையிலான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தொடங்கிய 'மக்கள் யுத்தம்' முதல் ஆராய வேண்டும்.

நூற்றாண்டுகளாக ஷா வம்ச மன்னராட்சியின் கீழ் இருந்த நேபாளத்தில் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை, சாதி அடிப்படையிலான பாகுபாடு, பல இன அடையாள அழிப்பு, பாலின ஏற்றத் தாழ்வு ஆகியவை தொடர்ந்து கொண்டிருந்தன.

நீண்டகாலமாக நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் – யு.எம்.எல்) இதற்கு எதிராக போராடி வந்த நிலையில், 1990 இல் எழுச்சி பெற்ற ஜன அந்தோலன் (மக்கள் இயக்கம்) அரசியலமைப்பு சபையை நிறுவிட வழிகோலியது. எனினும், அடிப்படை சமூக மாற்றங்கள் நடைபெறவில்லை. ஏற்கெனவே 1964 இல் மன்னர் மகேந்திரா இயற்றிய நிலச்சட்டம், நில உச்சவரம்பைக் கொண்டுவந்தது. ஆனால் அதன் அமுலாக்கம் மிகவும் பலவீனமாக இருந்தது.

இந்தப் பின்னணியில் எழுந்த மாவோயிஸ்ட் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளில் நிலச்சீர்திருத்தம், சமூக சமத்துவம், பல இன சமூகங்களுக்கான உரிமைகள், மகளிர் விடுதலை, மன்னராட்சி முறை ஒழிப்பு, குடியரசு அமைப்பு ஆகியவை அடங்கும். பத்து ஆண்டுகள் நீடித்த இந்த ஆயுதப் போராட்டத்தில் 15,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதில் 8,000 மாவோயிஸ்ட் போராளிகள், 4,500 அரசு பாதுகாப்பு படையினர், 2,500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அடங்குவர்.

**அமைதி உடன்படிக்கை மற்றும் குடியரசாக மாற்றம்**

2005 இல் மன்னர் ஞானேந்திரா அவசர நிலையை அறிவித்து நேரடி ஆட்சியைக் கைப்பற்றியது, மாவோயிஸ்ட்களுக்கும் ஜனநாயக கட்சிகளுக்கும் இடையில் கூட்டணியின் அடிப்படையை உருவாக்கியது.



2006 ஏப்ரல் மாதம் மாவோயிஸ்ட்கள் ஒருபக்க போர்நிறுத்தம் அறிவித்தனர். ஏப்ரல் 6 முதல் 24 வரை நடந்த மக்கள் எழுச்சியின் அழுத்தத்தால் மன்னர் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டியிருந்தது.

இந்த மாபெரும் எழுச்சியின் இடையே, மாவோயிஸ்டுகள் பொது நீரோட்டத்தில் முழுமையாக இணைவது தொடர்பான தொடர் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆலோசனைகளில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான தலைவர்கள் ஹர் கிஷன் சிங் சுர்ஜித், சீத்தாராம் யெச்சூரி ஆகியோர் பெரும் பங்கு வகித்தார்கள் என்பது வரலாறு.

**எஸ்.பி.ராஜேந்திரன்**

2006 நவம்பர் 21 – 22 அன்று கையெழுத்தான விரிவான அமைதி உடன்படிக்கை (Comprehensive Peace Accord) நேபாள வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தது. இந்த உடன்படிக்கை மாவோயிஸ்ட் மக்கள் விடுதலை இராணுவத்தை கண்டோன்மென்ட்களாக (cantonments) – அதாவது, உள்நாட்டுப் பகுதிகளில் இருப்பு இராணுவ படைகளாக மாற்றியது. ஐ.நா. கண்காணிப்பின் கீழ் ஆயுத மேலாண்மையை வைத்தது, அரசியல் நிர்ணய சபை அமைப்பதற்கும் குடியரசு மாற்றத்திற்கும் வழி வகுத்தது.

2007 முதல் 2011 வரை ஐக்கிய நாடுகள் சபையின் நேபாள கண்காணிப்பு பணி (UNMIN) நடைபெற்றது. 2008 மே 28 அன்று அரசியல் நிர்ணய சபை 240 ஆண்டுகால ஷா வம்ச மன்னராட்சி அமைப்பை முறையாக ஒழித்து குடியரசை அறிவித்தது. இது நேபாள மக்களின் நீண்டகால போராட்டத்தின் மகத்தான வெற்றியாகும்.

**குடியரசுக் காலத்தின் அரசியல் நிலையின்மை**

குடியரசு அறிவிப்புக்குப் பிறகு நேபாளம் கடுமையான அரசியல் நிலையின்மையைச் சந்தித்தது. 2008 முதல் 2025 வரை 17 ஆண்டுகளில் சுமார் 13 – 14 வெவ்வேறு அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்தன. குடியரசு ஆன பின்னர் கிரிஜா பிரசாத் கொய் ராலா (நேபாள காங்கிரஸ்) முதல் பிரதமராக 2008 மே முதல் ஓகஸ்ட் வரை பதவியில் இருந்தார். பிரச்சந்தா (மாவோயிஸ்ட்) ஓகஸ்ட் 2008 முதல் மே 2009 வரை பிரதமராக இருந்து அமைதி செயல்முறையை முன்னெடுத்தார், ஆனால் இராணுவத் தலைவர் நியமன சர்ச்சையில் பதவி விலக வேண்டியது வந்தது.

மாதவ் குமார் நேபாள் (நேபாள கம்யூனிஸ்ட் கட்சி –யு.எம்.எல்) மே 2009 முதல் பெப்ரவரி 2011 வரை அரசியலமைப்பு எழுதும் செயல் முறையை நடத்தினார். ஜலநாத்கனால் (நேபாள கம்யூனிஸ்ட் கட்சி – யு.எம்.எல்) 2011 பெப்ரவரி – ஓகஸ்ட் வரை குறுகிய காலம் ஆட்சியில் இருந்தார். பாபுராம் பட்டராய் (மாவோயிஸ்ட்) ஓகஸ்ட் 2011 முதல் மார்ச் 2013 வரை பிரதமராக இருந்து, 2015 இல் நிறைவேறிய அரசியலமைப்பிற்கான அடிப்படையை தயாரித்தார்.

**கம்யூனிஸ்ட் அரசுகளின் சாதனைகள் மற்றும் தோல்விகள்**

குடியரசான பின்னர், மாவோயிஸ்டுகள் உள்ளிட்ட கம்யூனிஸ்டுகளுக்கு மக்கள் செல்வாக்கு பெரிய அளவில் தேர்தல்களில் பிரதிபலித்தது.

கம்யூனிஸ்ட்கள் தலைமையிலான அரசுகள் பல முக்கிய சாதனைகளைச் செய்தன. மின்சார இணைப்பு 99 சதவீதமாக அதிகரித்தது, பல நீர்மின் திட்டங்கள் அமைக்கப்பட்டன. குழந்தை வறுமை 2015 இல் 36 சதவீதமாக இருந்தது 2025 இல் 15 சதவீதமாகக் குறைந்தது. மனித வளர்ச்சிக் குறியீட்டில் நேபாளம் சில முன்னேற்றங்களைக் கண்டது.

2018 இல் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யு.எம்.எல்) மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட் மையம்) ஒன்றிணைந்து நேபாள கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கின. இது மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஏனென்றால் 2017 தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிகள் 75 சதவீத இடங்களை வென்றிருந்தன.

ஆனால் இந்த ஒருங்கிணைப்பு 2021 இல் உச்ச நீதிமன்ற தீர்ப்பால் சிதைந்தது. கட்சிக்குள் கே.பி.சர்மா ஒலி மற்றும் பிரச்சந்தா இடையே ஆழமான கொள்கை வேறுபாடுகள் மற்றும் அதிகாரப் போட்டி இருந்தது. நீதிமன்றம் கட்சி பதிவு செயல்முறையில் முறைகேடுகள் இருந்ததாகக் கண்டறிந்து ஒருங்கிணைப்பை இரத்து செய்தது.

**அமைதி உடன்படிக்கையின் அமுலாக்கத்தில் அக்கறையின்மை**

அமைதி உடன்படிக்கையின் முக்கிய வாக்குறுதிகள் பல நிறைவேறாமல் போனது நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாகும். மாவோயிஸ்ட் மக்கள் விடுதலை இராணுவம் மற்றும் நேபாள இராணுவத்தின் ஒருங்கிணைப்பு மிக மெதுவாகவே நடைபெற்றது. 2007 இல் சுமார் 19,000 மாவோயிஸ்ட் போராளிகள் 28 கண்டோன்மென்ட்களில் வைக்கப்பட்டனர், ஆனால் 2011 வரை ஒருங்கிணைப்பு செயல்முறை தொடங்கவே இல்லை.

இறுதியில் சுமார் 1,400 மாவோயிஸ்ட் போராளிகள் மட்டுமே நேபாள இராணுவத்தில் ஒருங்கிணைக்கப்பட்டனர். 6,500 பேருக்கு தன்னார்வ ஓய்வு தொகை வழங்கப்பட்டது. மீதமுள்ள பெரும்பான்மையான முன்னாள் போராளிகள் சிவில் வாழ்க்கைக்கு திரும்ப போதிய உதவி பெறவில்லை. இதனால் பலர் கைவிடப்பட்ட உணர்வுக்கும் சமூக–பொருளாதார ஒதுக்கலுக்கும் ஆளாக நேரிட்டது.

போர்க்கால வன்முறைகளுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி என்பவை நிறைவேறவே இல்லை. 2015 இல் அமைக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் மற்றும் காணாமல் போனோர் விசாரணை ஆணையம் ஆகிய இரண்டும் மெதுவான முன்னேற்றத்தையே காட்டின. போர்க்காலத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

**அரசியலமைப்பு சாதனைகள் மற்றும் சர்ச்சைகள்**

2015 செப்டம்பர் 20 அன்று நேபாளம் தனது புதிய அரசியலமைப்பை நிறைவேற்றியது. இது பல வரலாற்றுச் சாதனைகளைக் கொண்டிருந்தது. நேபாளம் ஏழு மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சி நாடாக மாற்றப்பட்டது. மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. இது இந்து ராஜ்யத்தின் முடிவைக் குறித்தது. பல்வேறு இன, மொழி, மத சமூகங்களுக்கான பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டது. பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் சம பங்கேற்பு உறுதி செய்யப்பட்டது.

ஆனால் இந்த அரசியலமைப்பு பரந்த எதிர்ப்பையும் சந்தித்தது. மாதேசி, தரு போன்ற சமூகங்கள் போதிய பிரதிநிதித்துவம் இல்லை, புதிய குடியுரிமைச் சட்டம் பல குடும்பங்களைப் பாதிக்கும், மாநில எல்லைகள் நியாயமற்றவை என்று விமர்சித்தன. இது 2015–16 இல் இந்திய எல்லையில் முற்றுகைக்கு வழிவகுத்தது, நாட்டின் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதித்தது.

**பொருளாதார நெருக்கடியும் வெளிநாட்டுச் சார்புநிலையும்**

நேபாளத்தின் பொருளாதார நிலைமை குடியரசு அறிவிப்புக்குப் பிறகு அடிப்படையில் மாறவில்லை. தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024–25 இல் சுமார் 1,400 அமெரிக்க டொலர் மட்டுமே, இது தெற்காசிய நாடுகளிலேயே மிகக் குறைவு. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12–27 சதவீதம் வரை வெளிநாடுகளில் வேலை செய்யும் நேபாள தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தில் இருந்து வருகிறது.

நேபாளத்தில் மொத்தமுள்ள 3.1 கோடி மக்கள்தொகையில் சுமார் 5,34,500 பேர் வெளிநாட்டில் வேலை செய்கின்றனர். இது 1,000 மக்களுக்கு 17.2 பேர் என்ற விகிதமாகும், இது உலகின் மிக அதிக வெளிநாட்டு வேலை விகிதங்களில் ஒன்று. 2000 இல் 55,000 வெளிநாட்டு வேலை அனுமதிகள் மட்டுமே வழங்கப்பட்டன, 2024–25 இல் இது 8,39,266 ஆக பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

இவர்கள் முக்கியமாக கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், மலேசியா போன்ற நாடுகளில் கட்டுமானத் தொழிலாளர்கள், வீட்டு வேலையாட்கள், பாதுகாவலர்கள், சாரதிகள் என குறைந்த ஊதிய வேலைகளில் ஈடுபடுகின்றனர். உள்நாட்டில் இளைஞர் வேலையின்மை 22.7 சதவீதத்தை எட்டியுள்ளது, மொத்த வேலையின்மை 12.6 சதவீதமாகும்.

சர்வதேச நிதி நிறுவனத்தின் (IMF) நீட்டிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் கீழ் நேபாளம் நவதாராளமய கொள்கைகளைப் பின்பற்ற நிர்பந்திக்கப்படுகிறது. உள்நாட்டு வருவாயை அதிகரிக்க அழுத்தம் கொடுக்கப்பட்டதால் டிஜிட்டல் சேவை வரி மற்றும் கடுமையான வாட் (VAT) வரி விதிமுறைகள் கொண்டுவரப்பட்டன.

**1964 முதல் நிலச்சீர்திருத்தத் தோல்வி**

அமைதி உடன்படிக்கையின் முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றான நிலச்சீர்திருத்தம் 19 ஆண்டுகள் கழித்தும் நிறைவேறவில்லை. 1964 இல் மன்னர் மகேந்திரா காலத்தில் இயற்றப்பட்ட நிலச் சட்டத்தின் பலவீனமான அமுலாக்கம் தொடர்ந்தது. பல்வேறு கணக்கெடுப்புகளின்படி 20–25 சதவீதம் வரையிலான குடும்பங்கள் இன்னும் நிலமற்றவர்களாகவே உள்ளன.

பெரிய நில உடைமையாளர்கள் மற்றும் உயரடுக்கு குடும்பங்கள் தொடர்ந்து விவசாய நிலங்களையும் நகர்ப்புற ரியல் எஸ்டேட்டையும் கட்டுப்படுத்துகின்றன. முற்றிலும் நிலமற்ற, ஓரளவு நிலமுள்ள குடும்பங்கள் விவசாயக் கூலிகளாக அல்லது வேலைக்காக இடம்பெயர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பல நில உடைமையாளர்கள் நிலத்தைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டனர் அல்லது மறுவிநியோகத்திற்கு பதிலாக குத்தகைக்கு விட்டுவிட்டனர்.

### ‘நெப்போ கிட்ஸ்’களும் வர்க்க முரண்பாடும்


சமீபகாலங்களில் ‘நெப்போ கிட்ஸ்’ (Nepotism Kids) என்ற சொல் நேபாளிய சமூக ஊடகங்களில் வைரலானது. இது அரசியல் தலைவர்களின் குழந்தைகளின் ஆடம்பர வாழ்க்கை முறையைக் குறிக்கிறது. அரசு அதிகாரிகளின் குழந்தைகள் விலையுயர்ந்த கார்களில் பயணம் செய்வதும், டிசைனர் பிராண்ட்களை அணிந்துகொண்டு சமூக ஊடகங்களில் புகைப்படங்களை பகிர்வதும் உள்நாட்டில் வேலைவாய்ப்பு இல்லாமல் அல்லாடும் சாதாரண நேபாளிகளுக்கு ஆத்திரத்தை அதிகரித்தது.

இது ஆளும் வர்க்கத்திற்கும் உழைக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்க முரண்பாட்டின் கூர்மையான வெளிப்பாடாகும். மேலும், ஊழல் குறியீட்டில் நேபாளம் 2024 இல் 180 நாடுகளில் 107ஆவது இடத்தில் உள்ளது, இது 2015 இல் இருந்ததைவிட மோசமான நிலை. பல பெரிய ஊழல் வழக்குகள் முழுமையான விசாரணை இல்லாமல் புதைக்கப்பட்டுள்ளன.

நேபாளத்தில் மக்கள் எழுச்சியால் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, ஜனநாயகப் புரட்சி ஏற்பட்டது என்றாலும், அது, நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறைக்கு முடிவு கட்டிய வர்க்கப் புரட்சியாக நடைபெறவில்லை. நிலம் உட்பட உற்பத்தி சக்திகள் பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு மாறவில்லை. மாறாக, ஜனநாயக அரசியலமைப்பின் அடிப்படையிலான தேர்தல் முறையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெற்றி பெற்றன. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அரசியல் உறுதியோடு நிலச்சீர்திருத்தம், தொழில் வளர்ச்சி, வேலை உருவாக்கம், உற்பத்தி சக்திகளை மிக வேகமாக நவீன மயமாக்குவது – போன்ற நடவடிக்கைகளில் துரிதகதியில் செயல்படவும், மாற்றுப் பொருளாதாரக் கொள்கைகளை அமுலாக்கவும் திட்டமிடத் தவறினார்கள் முதலாளித்துவக் கட்சிகளோடு (நேபாள காங்கிரஸ் உட்பட) சமரசங்கள் செய்து, கூட்டணி ஆட்சி அமைத்தார்கள். இவையெல்லாம், நேபாள மக்களின் – குறிப்பாக இளைஞர்களை நம்பிக்கையை இழக்கச் செய்தன.

### செப்டம்பர் 2025: ஜென் – இசட் (Gen Z) கிளர்ச்சியின் வெடிப்பு

இத்தகைய பின்னணியில், செப்டம்பர் 4, 2025 அன்று கே.பி. சர்மா ஒலி அரசு




டிக்டாக், இன்ஸ்டாகிராம், பேஸ்புக் போன்ற சமூக ஊடக தளங்களுக்கு திடீர் தடை விதித்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைக் காரணம் காட்டி, அரசு இதை “ஒழுங்குமுறை” என்ற பெயரில் நியாயப்படுத்தியது, ஆனால் உண்மையில் இது விமர்சனக் குரல்களை தடுக்கும் முயற்சியாகவே பார்க்கப்பட்டது.

இந்த தடை 1995 – 2010 காலத்தில் பிறந்த ஜென் – இசட் தலைமுறை இளைஞர்களிடையே கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அவர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் வெறும் பொழுதுபோக்கு மட்டும் அல்ல, மாறாக வாழ்வாதாரத்தின் அடிப்படையாகவும் உள்ளது. பிற வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையில், பல இளைஞர்கள் யூட்யூப், டிக்டாக், பேஸ்புக் வீடியோக்கள் மூலம் கன்டென்ட் கிரியேட்டர்களாக வேலை செய்து ஓரளவு வருமானம் பெற்று வந்தனர். அரசு விதித்த தடையால் அவர்களின் வருமான மூலம் உடனடியாக துண்டிக்கப்பட்டது.

மேலும் நேபாளத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந்த குடும்பங்கள் பேஸ்புக் மெசெஞ்சர், வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்கள் மூலமே தொடர்பில் இருந்து வருகின்றனர். தடையால் குடும்பத் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

### அழிவுகர நிகழ்வுகள் மற்றும் அரசின் பதிலளிப்பு

பல்லாண்டு கால வாழ்வியல் எதிர்பார்ப்புகள் கானல் நீராகிக் கொண்டிருக்கும் நிலையில், ஏற்கனவே கடும் அதிருப்தியில் உள்ள நேபாள இளம் தலைமுறையினரிடம், சமூக ஊடகத்தடையானது ஒரு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

செப்டம்பர் 8 அன்று ஆவேசத்துடன் தலைநகர் காத்மாண்டு உட்பட வீதிகளில் இறங்கினர். இளைஞர்களின் எதிர்ப்புணர்வையும் மன்னராட்சி வீழ்ந்தது முதல் குடியரசைக் கவிழ்க்கவும், எந்த மாற்றங்களும் நடந்து விடாமல் நிலங்கள் உட்பட பெரும் சொத்துக்களை காப்பாற்றிக் கொள்ளவும் பல சதி வேலைகளைச் செய்து கொண்டிருக்கிற எதிர்ப்புரட்சி சக்திகள் இதைப் பயன்படுத்தி கலவரம் செய்வார்கள் என்பதையும் துல்லியமாக கணிக்கத் தவறிய சர்மா ஒலி அரசு, காவல்துறை மூலம் கடுமையான வன்முறையுடன் பதிலளித்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் “டிஜிட்டல் உரிமைகள்”, “இணைய சுதந்திரம்”, “கருத்துச் சுதந்திரம்” போன்ற முழக்கங்களை எழுப்பினர். ஆனால் செப்டம்பர் 8 மாலை மற்றும் இரவு காவல்துறை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நேரடியாக துப்பாக்கிச் சூடு நடத்தியது.

செப்டம்பர் 8 – 9 இல் 20 இளைஞர்கள் காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர், 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது நேபாள வரலாற்றில் ஒரே நாளில் நடந்த மிகப் பெரிய உயிரிழப்பு. (சனிக்கிழமை பலி எண்ணிக்கை 51 ஆக அதிகரித்து விட்டது). முன்னர் 2006 இல் மன்னர் ஞானேந்திராவுக்கு எதிரான எழுச்சியின் போது 25 பேர் கொல்லப்பட்டனர் ஆனால் அது பல வாரங்களாக நீடித்தது.

காவல்துறையின் துப்பாக்கிச் சூடு மக்களின் கோபத்தை வெடிக்க வைத்தது. அமைதியான ஆர்ப்பாட்டம் தீவிரமான மக்கள் கிளர்ச்சியாக மாறியது. ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகள் சமூக ஊடகத் தடையைத் தாண்டி விரிவடைந்தன – முழு அரசு அகற்றல், ஊழல் எதிர்ப்பு, பொறுப்புக்கூறல், வேலைவாய்ப்பு உருவாக்கம் என எல்லா கோரிக்கைகளும் வீதிக்கு

வந்தன.

செப்டம்பர் 9 அன்று கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் அனைத்து வலதுசாரி பிற்போக்கு சக்திகளும் கலந்து, அரசின் அடையாளங்கள் மீது தீவிரமான தாக்குதல் நடத்தினர். நாடாளுமன்ற கட்டடத்தை உடைத்து நுழைந்து தீ வைத்தனர். நாட்டின் ஜனநாயகத்தின் அடையாளமான இந்த கட்டடத்தின் பல பகுதிகள் எரிந்து சேதமடைந்தன. நேபாளத்தின் நிர்வாக தலைமையகமான சிங்க தர்பாரின் ஒரு பகுதி தீக்கிரையானது, அரசு ஆவணங்கள் அழிக்கப்பட்டன.

உச்ச நீதிமன்ற கட்டடத்திற்கு அருகில் உள்ள கட்டடங்கள் தீ வைக்கப்பட்டன. சீதல் நிவாஸ் எனப்படும் ஜனாதிபதி இல்லம் தாக்கப்பட்டது. பலுவாடாரில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்தில் மக்கள் உடைத்து நுழைந்து தீ வைத்தனர், கட்டடம் கணிசமான பகுதி சேதமடைந்தது.

அரசியல் கட்சி அலுவலகங்களும் தப்பவில்லை. நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யு.எம்.எல்) தலைமையகத்தில் கட்சிக் கொடிகள் கீழே இறக்கி எரிக்கப்பட்டன. நேபாள காங்கிரஸின் மைய அலுவலகம் முற்றிலுமாக எரிக்கப்பட்டது, கட்சியின் வரலாற்று ஆவணங்கள் மற்றும் பதிவுகள் அனைத்தும் அழிந்தன.

### அரசியல் தலைவர்கள் மீதான நேரடி தாக்குதல்கள்

மிகவும் அதிர்ச்சியளிக்கும் வகையில் அரசியல் தலைவர்கள் மீதான நேரடி வன்முறை இருந்தது. நிதி அமைச்சர் பிஷ்னு பவுடல் கோபமடைந்த கூட்டத்தால் வீதிகளில் துரத்தப்பட்டார். அவர் தாக்கப்பட்டு, உடைகள் கழற்றப்பட்டு, உள்ளாடையுடன் வீதிகளில் அணிவகுக்க வைக்கப்பட்டார்.

முன்னாள் பிரதமர் ஜலநாத் கனாலின் மனைவி ராஜ்யலட்சுமி சித்ரகர் மீது கொடூரமான தாக்குதல் நடந்தது. அவர் கடுமையாக காயமடைந்து உயிரிழந்தார். பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் இல்லம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. முன்னாள் பிரதமர் பிரச்சந்தா மற்றும் ஷேர் பகதூர் தூபா ஆகியோரின் இல்லங்களும் தப்பவில்லை.

ஹோட்டல்கள், டிபார்ட்மென்டல் ஸ்டோர்கள், கேபிள் கார்கள், கார் ஷோரூம்கள், வங்கிகள் ஆகியவற்றையும் தாக்கினர். நூறு பில்லியன் நேபாளி ரூபாய்க்கும் அதிகமான சொத்து சேதம் ஏற்பட்டது. திரிபுவன் சர்வதேச விமான நிலையம் 24 மணி நேரம் மூடப்பட்டது. ஆயிரக்கணக்கான கைதிகள் சிறைகளை உடைத்து விடுவிக்கப்பட்டனர்.

### அரசியல் தலைமையின் சரிவு

வன்முறையின் அழுத்தத்தால் பல அமைச்சர்கள் பதவி விலக வேண்டியிருந்தது. காவல் துறையின் தோல்வி மற்றும் மக்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கான பொறுப்பாக உள்துறை அமைச்சர் ராஜினாமா செய்தார். விவசாய அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சரும் மக்களின் அழுத்தத்தால் பதவி விலகினர். 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை விட்டு விலகினர், இது நெருக்கடியின் ஆழத்தை வெளிப்படுத்தியது.

செப்டம்பர் 9, 2025 மாலை பிரதமர் கே.பி. சர்மா ஒலி தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ராம்சந்திர பௌடேலிடம் சமர்ப்பித்தார். ஒலி தனது ராஜினாமா அறிக்கையில் "அரசியலமைப்பு தீர்வுக்கான பாதையை வகுக்க" இந்த முடிவை எடுத்ததாகக் கூறினார். ஆனால் உண்மையில் நிலைமை அரசின் கட்டுப் பாட்டை விட்டு வெளியேறியிருந்தது. பல வதந்திகள் சர்மா ஒலி மற்றும் அவரது அமைச்சர்கள் நாட்டை விட்டு தப்பித்ததாகக் கூறின.

### மார்க்சிஸ்ட் கட்சியின் அறிக்கை

செப்டம்பர் 10, 2025 அன்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு மிக முக்கியமான அறிக்கையை வெளியிட்டது. கட்சி 20 இளைஞர்களின் மரணத்திற்கு ஆழ்ந்த துக்கம் தெரிவித்தது.

"மக்களின், குறிப்பாக இளைஞர்களின் எதிர்ப்பானது, அடுத்தடுத்த அரசாங்கங்களின் தோல்விகளால் அவர்களின் நியாயமான பிரச்சனைகளைத் தீர்க்க மற்றும் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாமையால் வளர்ந்த பரந்த கோபத்தை பிரதிபலிக்கின்றது" என்று மார்க்சிஸ்ட் கட்சி மிகச்சரியான முறையில் குறிப்பிட்டது.

எதிர்ப்பின் முக்கியக் காரணங்களாக ஆளும் வட்டங்களில் பரவ லான ஊழல், வளர்ந்து வரும் வேலையின்மை, சமூக ஊடகத்தளங்கள் மீதான தடைகளைக் குறிப்பிட்டது. அதே வேளையில் மார்க்சிஸ்ட் கட்சி இவ்வாறு எச்சரித்தது: "நேபாளத்தின் இளைஞர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள், தற்போது எழுந்துள்ள சூழ்நிலையை மன்னராட்சி ஆதரவு மற்றும் பிற எதிர்ப்புரட்சி சக்திகள் சுரண்டா மல் இருக்க விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த வெகுஜன எதிர்ப்புகளின் விளைவு ஜனநாயகத்தை மீட்பதாக இருக்க வேண்டும், நிலப்பிரபுத்துவ எதேச்சதிகார ஆட்சிக்கு மறுபடியும் திரும்புவதாக இருக்கக்கூடாது."

### எதிர்ப்புரட்சி ஆபத்துகள் மற்றும் பிற தலையீடுகள்

நேபாளத்தின் நெருக்கடியின் மத்தியில், எதிர்ப்புரட்சி சக்திகள் மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்தி தங்கள் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க முயன்றுள்ளன என்பதே மேற்கண்ட மிகப் பெரும் வன்முறைக் காட்சிகள். ராஷ்ட்ரிய பிரஜாதந்திர கட்சி (RPP) நேபாளத்தின் முக்கிய மன்னராட்சி சார்பு கட்சியாகும். மார்ச் 2025 இல் இக்கட்சி மன்னராட்சி மீட்டெடுப்பிற்கான ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களைத் தாக்கியது நினைவு கூரத்தக்கது. குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், தற்போதைய வன்முறையில் ஆர்.பி.பி கட்சியின் எந்த அலுவலகமும் தாக்கப்படவில்லை. ஆர்.எஸ்.எஸ் – சின் சர்வதேச அமைப்பான இந்து ஸ்வயம்சேவக் சங் (HSS), விஸ்வ இந்து மகாசபா, சிவசேனா நேபாள் போன்ற இந்துத்துவா அமைப்புகள் மதச்சார்பற்ற கொள்கைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்து இந்து ராஜ்யம் திரும்ப வேண்டும் என்று கோருகின்றன. தற்போதைய போராட்டங்களில் பலரது கையில் உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் போஸ்டர்கள் காணப்பட்டன.

இது நேபாளத்தின் முதலாளித்துவ – நில பிரபுத்துவ சக்திகள் மத்தியில் இந்திய பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் மாதிரியான இந்து தேசியவாத அரசியலின் செல்வாக்கைக் காட்டுகிறது.

அமெரிக்க மிலேனியம் சேலஞ்ச் கோர்ப்பரேசன் (Millennium Challenge Corporation - MCC) ஒப்பந்தம் மற்றும் அமெரிக்காவின் ஜனநாயகத்திற்கான தேசிய அமைப்பின் (National Endowment for Democracy)

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# இஸ்ரேலுக்கு 'சுற்றுலா' சென்ற இலங்கை ஊடகவியலாளர்கள் யார் தெரியுமா?

இஸ்ரேலின் தற்போதைய நிலைமை குறித்து வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு 'கல்வி' அளிக்க இஸ்ரேல் அரசின் நிதி உதவியுடன் ஐந்து நாள் பயணமாக 16 இலங்கை ஊடகவியலாளர்கள் இஸ்ரேல் சென்றுள்ளனர்.

எங்கள் தொழிலாளர்களை அங்கு தொடர்ந்து அனுப்புகிறோம், இஸ்ரேலியர்களுக்கு இலவச விசா வழங்குகிறோம்,அவர்களை விசாக்காலம் முடிந்தும் நீண்ட காலம் தங்க அனுமதிக்கிறோம், சட்ட விரோதமாக வணிக நிறுவனங்களையும் ஸப்பெர்ட் தலங்களையும் கட்ட அனுமதிக்கிறோம், இந்த சமய தலங்களுக்கு பொது நிதியுதவியுடன் கூடிய பொலிஸ் மற்றும் எஸ்.டி.எ.ஃப் (STF) பாதுகாப்பை வழங்குகிறோம். இப்பொழுது அவர்களின் பிரச்சாரத்துக்கு உதவ எங்கள் ஊடகவியலாளர்களையும் இனப்படுகொலை இஸ்ரேல் அரசுக்கு அனுப்புகிறோம்.

இதுதான் எமது நாட்டின் தற்போதைய நிலைமை.

இந்த திட்டங்கள் புதியவை அல்ல. நூற்றுக்கணக்கான மேற்கத்தைய ஊடகவியலாளர்களும் இந்த சுற்றுப்பயணங்களில் பங்கேற்கின்றனர்.

சமீபத்தில் இந்திய ஊடகவியலாளர்கள் குழு ஒன்று அங்கு அழைத்துச் செல்லப்பட்டது. அங்கு அவர்களுக்கு இஸ்ரேலிய பிரதமரின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை போர்க் குற்றவாளியே கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

காஸாவில் இஸ்ரேலிய அரசால் ஏறத்தாழ 250 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கும் நேரத்தில் இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் குழு இஸ்ரேலுக்கு சுற்றுப்பயணம் செய்வது திகைப்பூட்டுகிறது. இப்படி இலங்கையில் இருந்து சென்ற ஊடகவியலாளர்கள் யார் என்று பாருங்கள்!

நமது நாட்டின் வெறித்தனமான இனவெறியரும் சியோனிஸ்டுமான மதுபாசண பிரபாத் ரணஹன்சா. இவர் 'சிங்கள ராவய'வின் தீவிர உறுப்பினர். கடந்த மூன்று ஆண்டுகளாக அவரும் அவரது குண்டர் படையும் கறுப்பு யூலை மற்றும் மே 18 நினைவு தினங்களை வன்முறையாக சீர்குலைப்பதையும், சமீப காலங்களில் இஸ்ரேல் ஆதரவு நடவடிக்கைகளில் பங்கேற்பதையும் நாம் கண்டிருக்கிறோம்.



25.08.2025 அன்று காஸா மருத்துவமனையில் இஸ்ரேலிய விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள்

நாம் அனைவரும் அறிந்தபடி, சிங்கள ராவய தமிழ் வெறுப்பு மற்றும் இஸ்லாமிய வெறுப்பை பரப்புவதற்குப் பெயர்பெற்றது. மேலும் பொதுபல சேனாவுடன் சேர்ந்து தமிழர்கள் மற்றும் முஸ்லீம்களையும் தாக்குவதற்கு வன்முறைக் கும்பல்களை அணிதிரட்டுவதற்குப் பொறுப்பாக இருந்துள்ளார்கள்.

*ராஜ்குமார் ராஜீவ்காந்*

இஸ்ரேலுக்கான இந்தச் சுற்றுப்பயணத்தில் சிங்கள ராவயவை சேர்ந்த ஜனேந்திர ஆரியபாலவும் இருக்கின்றார்.

அடுத்ததாக, அரசாங்கத்துக்குச் சொந்தமான ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த பிரசாத் தொடங்கொடகே மற்றும் விஜய திஸாநாயக்க ஆகியோரும் இந்தப் பயணத்தில் இருக்கின்றனர்.

இவர்கள் தவிர, பல ஆண்டுகளாக இஸ்லாமிய வெறுப்பையும், இனவாதத்தையும் தூண்டுவதற்கு களம் அமைத்துக் கொடுத்து வரும் லங்கா தீப, தெரண, ஹிரு, த ஐலண்ட ஆகியவற்றின் ஊடகவியலாளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இஸ்ரேலில் இருந்து ஒருதலைப்பட்சமான கருத்தோடு திரும்பி வந்து இஸ்ரேலுக்கு சார்பான கருத்துகளை வெளியிடும் போது அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்குமா?

பலஸ்தீனியர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதிலிருந்தும், இஸ்ரேலிய அரசாங்கம் பின்பற்றும் தீவிரமான அரபு எதிர்ப்பு உணர்வுகளிலிருந்தும் அவர்கள் என்னத்தைக் கற்றுக் கொள்வார்கள் என்பது குறித்து நாம் அதிகம் ஆச்சரியப்படத் தேவையில்லை. அவர்கள் வெளியிடும் கதைகள் இங்கே இணைக்கப்படும் போது இலங்கையில் இனங்களுக்கிடையில் ஏற்படும் தாக்கம் அவ்வளவு நல்லதாக இருக்காது.

முக்கியமான கேள்வி என்னவென்றால், இந்த சுற்றுப் பயணம் இலங்கை அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டதா?

ஊடகவியலாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு யார் ஏற்பாடு செய்தார்கள்?

இந்த ஊடகவியலாளர்கள் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவருடன் படங்களில் இருப்பதைப் பார்க்கும் போதும், இலங்கைத் தூதுவரின் அதிகாரபூர்வமான முகநூல் பக்கத்தில் இந்தப் பயணம் பற்றிய செய்தி வந்திருப்பதைப் பார்க்கும் போதும், இந்தப் பயணத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முழுமையான ஒப்புதல்

இல்லாவிட்டாலும், அரசாங்கத்தின் ஒரு வகையான ஆசி இருப்பது போல் தெரிகிறது.

தீவிர வலதுசாரிகள் மீண்டும் வெளிப்படையாக எழுச்சி பெற்று வரும் சூழலில், குறிப்பாக இலங்கையில் இன மற்றும் மத சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக இனவெறி பிடித்தவர்களால் ஊடகங்கள் எவ்வளவு விரைவாக ஆயுதம் ஏந்த முடியும் என்பதை நன்கு அறிந்திருக்கும் நிலையில், சர்வதேச அளவில் கண்டனம் செய்யப்பட்ட இஸ்ரேல் நாட்டுக்கு ஊடகவியலாளர்களையும், இனவெறி குழுக்களின் முக்கிய உறுப்பினர்களையும் அனுப்புவது எப்படி ஒரு பொறுப்பான செயலாகும்?


குறிப்பாக, சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் ஒரு புதிய வகை அரசியலை அரசாங்கம் உறுதியளித்துள்ள நிலையில், ஊடகவியலாளர்கள் தங்கள் சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து உருவாக்கக்கூடிய சாத்தியமான சியோனிச ஆதரவு மற்றும் இஸ்லாமிய வெறுப்பு உள்ளடக்கத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு கையாளும்?

இந்தப் பாதையில் பயணிப்பது நாட்டின் ஏனைய தேசிய இனங்களுக்கு நல்ல முடிவாகஇருக்காது.

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக இருப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் ஒரு உறுதியான முடிவை எடுக்க முடியவில்லை என்றாலும், அமெரிக்க ஆதரவு இஸ்ரேல் அரசின் தொடர்ச்சியான இனப்படுகொலையை நேரடியாக கண்டிக்க முடியவில்லை என்றாலும், குறைந்தபட்சம் நமது நாட்டின் அமைதியைப் பேணுவதற்கும், குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் ஒரு உறுதியான நடவடிக்கையாக, பிரதான நீரோட்டத்திலும் சமூக ஊடகங்களிலும் விரைவில் பூசப்படவுள்ள இஸ்ரேல் ஆதரவுப் பிரச்சாரத்தைக் கண்காணிப்பதில் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்க முடியுமா?

(இது Marisa DS என்பவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சுருக்கமாகும்)

## சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதிகள் அதிகரிக்கின்றன




**2026** ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன், 2025), சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதிகள், கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைக் காட்டிலும் 18 விழுக்காடு உயர்ந்து, 4.4 பில்லியன் டொலர்கள் எனும் குறிப்பிடத்தக்க அளவை அடைந்து, வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. முன்னதாக இதே காலகட்டத்தில் இரு ஆண்டுகளாக ஏற்றுமதி சரிவைச் சந்தித்திருந்த நிலையில், இந்த மீட்சி மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

ரஷ்யாவிடமிருந்து இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்து வருவதைச் சுட்டிக்காட்டி, இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி விதிக்கப்போவதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருக்கும் அச்சுறுத்தலான சூழலிலும், சீனாவுடனான வர்த்தக உறவுகள் புத்துயிர் பெற்று வருவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. இந்த புதிய வரி விதிப்புகள் ஓகஸ்ட் 27 ஆம் திகதி முதல் அமுலுக்கு வர இருக்கின்றன.

ஏப்ரல்–ஜூன் மாதங்களில், சீனாவுக்கான பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி 452 மில்லியன் டொலர்களிலிருந்து 865 மில்லியன் டொலர்களாக, கிட்டத்தட்ட இருமடங்காகப் பெருகியுள்ளது. பிற முக்கிய ஏற்றுமதிப் பொருட்களும் இதேபோன்று வளர்ச்சியைக் கண்டன: மசாலாப் பொருட்களின் ஏற்றுமதி 33 விழுக்காடு உயர்ந்தது. சேதன இரசாயனங்கள் 26 விழுக்காடு அதிகரித்து 147 மில்லியன் டொலர்களை எட்டின. கடல்சார் பொருட்கள் 5 விழுக்காடு வளர்ச்சி கண்டன.

வர்த்தகத்தில் ஏற்பட்ட இந்த ஏற்றம், புத்துயிர் பெற்ற அரசியல் பேச்சுவார்த்தைகளுடன் சேர்ந்தே நிகழ்ந்துள்ளது. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலின் (Ajit Doval) சிறப்பு அழைப்பின் பேரில், சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யி ஓகஸ்ட் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். சிறப்புப் பிரதிநிதிகள் நடத்திய இந்த உரையாடலின் போது, இந்தியா–சீனா உறவுகள் மேன்மேலும் வலுப்பெற்று செழித்திட, எல்லைப் பகுதியில் அமைதியைப் பேணுவதன் இன்றியமையாமை குறித்து இரு தரப்பினரும் ஆழமாக விவாதித்தனர்.

லிபுலேக், ஷிப்கி லா, நாது லா போன்ற கணவாய்கள் வழியாக எல்லை வர்த்தகப் பாதைகளை மீண்டும் திறப்பது, நேரடி விமானச் சேவைகளை மீண்டும் தொடங்குவது, வணிகம் மற்றும் சுற்றுலாவுக்கான விசா விதிமுறைகளைத் தளர்த்துவது, புனித யாத்திரைகளை ஊக்குவிப்பது, மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தையும் முதலீடுகளையும் பெருக்குவதற்கு ஆதரவளிப்பது போன்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கும் அவர்கள் இசைவு தெரிவித்தனர்.

ஓகஸ்ட் 20 அன்று நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான SCO உச்சி மாநாட்டில், இந்தியாவுக்கான சீனத் தூதர் சூ ஃபெய்ஹோங் (Xu Feihong) உரையாற்றுகையில், சீனா 'வர்த்தக அச்சுறுத்தல்களுக்கு எதிராக இந்தியாவிற்கு தோள் கொடுக்கும்' எனத் தெரிவித்தார். மேலும், இருபெரும் அண்டை நாடுகளுக்கு, 'ஒத்துழைப்பும் ஒற்றுமையே பொதுவான வளர்ச்சிக்கு உள்ள ஒரே வழி' என்பதையும் அவர் ஆழமாக வலியுறுத்தினார்.

# ஹோ சி மின் : தனித்துவமானதொரு புரட்சியாளர்



உலகில் இதுவரை நடைபெற்ற புரட்சிகளிலேயே, தனித்துவமான ஒன்றாகத் திகழ்வது வியட்நாம் புரட்சியாகும். இதற்கான அடிப்படைக் காரணம், வியட்நாம் புரட்சி என்பது, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய இரு பெரும் ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவங்களை நேரடியாக எதிர்த்தும், இரண்டாம் உலகப் போரின்போது இந்தோசீனப் பகுதியைக் கைப்பற்றிய ஜப்பானிய ஆக்கிரமிப்புப்படைகளை எதிர்த்தும் தீர்மானகரமான வகையில் ஆயுதம் தாங்கிப் போராடி, வெற்றிவாகை சூடிய மகத்தான ஒரு புரட்சியாகும். அத்தகையதொரு புரட்சிக்குத் தலைமையேற்று நடத்தி, வழிகாட்டிய ஹோ சி மின் தன்னளவில் தனித்துவமான புரட்சியாளராகவும் திகழ்ந்தவர்.

பிரான்ஸின் கீழிருந்த வியட்நாமில், பிரான்ஸ் காலனி ஆட்சியாளர்களுக்கு உதவும் வகையில் செயல்பட்ட, மிகுந்த அதிகாரம் மிக்க ஒரு தந்தைக்கு 1890ஆம் ஆண்டில் நிகுயென் சின் குங் என்ற இயற்பெயருடன் பிறந்தவர் ஹோ. இதில் நிகுயென் என்பது வியட்நாம் அரச குலத்தைச் சார்ந்த குடும்பத்தினர் என்பதைக் குறிப்பதாகும். பின்னாளில் தனது புரட்சி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில், சுமார் 50 முதல் 200 புனைபெயர்களில் அவர் உலகம் முழுவதிலும் செயல்பட்டு வந்தபோதிலும், இறுதியில், ஹோ சி மின் என்ற பெயரே நிலைத்து நின்றது. வியட்நாம் மக்களாலும், உலகம் முழுவதிலும் உள்ள புரட்சிகர இளைஞர்களாலும் 'ஹோ மாமா' (அங்கிள் ஹோ) என்றே அவர் அழைக்கப்பட்டு வந்தார்.

**வீ.பா.கணேசன்**

அவரது குடும்பச் செழிப்பின் காரணமாக பிரெஞ்சு, ஆங்கிலம் நன்கு கற்கும் வாய்ப்பைப் பெற்றார். 1911ஆம் ஆண்டில் ஒரு பிரெஞ்சுக் கப்பலில் சமையல்காரரின் உதவியாளராக வேறு ஒரு பெயரில் தன் பயணத்தைத் தொடங்கிய ஹோ, 1917 ஆம் ஆண்டு வரை உலகின் பல நாடுகளுக்கும் பயணம் செய்தார். 1912-13ஆம் ஆண்டுகளில் அவர் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் புகழ்பெற்ற ஒரு ஓட்டலில் ரொட்டி தயாரிப்பவராக பணிபுரிந்தார். 1913-1919 காலப்பகுதியில் பிரிட்டனில் ஒரு ஓட்டலில் பணிபுரிந்து வந்தார். இக்காலப்பகுதியில் வியட்நாமில் இருந்து வந்து குடியேறிய இளைஞர்களுடன் தொடர்பு கொள்வதில் தீவிரம் காட்டினார்.

1917ஆம் ஆண்டிலிருந்து பிரான்ஸில் வசிக்கத் தொடங்கிய ஹோ, விடுதலை உணர்வுமிக்க வியட்நாம் இளைஞர்களை அணிதிரட்டத் தொடங்கினார். இதற்கென ஒரு பத்திரிக்கையையும் நடத்தி வந்தார். இந்தப் பத்திரிக்கையில் நிகுயென் அலி குவாக் என்ற புனைபெயரில், பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்து வியட்நாம் விடுதலை பெற வேண்டியதன் அவசியம் குறித்து உணர்ச்சி பொங்கும் கட்டுரைகளை எழுதி வெளிநாடுகளில் வசிக்கும் வியட்நாம் இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்து வந்தார்.

முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்து, போரில் வெற்றி பெற்ற நாடுகள், தோல்வியுற்ற நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த மற்ற காலனி நாடுகளை தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்ள பிரான்ஸின் வெர்செய்ல்ஸ் நகரில் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, இந்த இளைஞர்கள் குழுவின் சார்பில் ஒரு வேண்டுகோள் எழுத்துபூர்வமாக வைக்கப்பட்டது. அதில் வியட்நாம் மக்களின் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும், பிரான்ஸின் காலனியாதிக்கத்திலிருந்து வியட்நாமை விடுவித்து, சுயேச்சையான ஓர் அரசை அங்கு உருவாக்குவதை உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர்களால் கோரிக்கை எழுப்பப்பட்ட போதிலும், மேற்கத்திய நாடுகள் அதைச் சற்றும் மதிக்கவில்லை. இந்தப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பாக, இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி, அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனுக்கும், பிரான்ஸ் நாட்டுப் பிரதமர் க்ளெமென்க்யூவிற்கும் இக்குழுவினர் கடிதம் எழுதியிருந்தனர். இத்தகைய முயற்சிகளே, பின்னாளில் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான உறுதியான, வீரஞ்செறிந்த போரை மேற்கொள்ள ஹோவிற்கு உத்வேகம் அளித்தது. அதுவே வியட்நாம் விடுதலையின் முன்னணி வீரராகவும் அவரை முன்னிறுத்தியது.

தாய்மொழியான வியட்நாமிய மொழி தவிர, பிரெஞ்சு, ஆங்கிலம், ருஷ்யன், சீன மொழியில் இரண்டு பிரிவுகளான மாண்டரீன், காண்டனீஸ் ஆகிய மொழிகளை நன்கு அறிந்து பயன்படுத்துபவராகவும் ஹோ இருந்தார். வியட்நாமிய, பிரெஞ்சு, சீன மொழிகளில் தொடர்ந்து பல நூல்களையும் அவர் எழுதினார்.

ஹோ, தன் வாழ்நாளில், பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர்களில்

ஒருவராக, மூன்றாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவராக, இந்தோ சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனராக, பின்னர் வியட்நாம் தொழிலாளர் கட்சி, வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் நிறுவனராகவும் திகழ்ந்ததன் காரணமாக, உலகின் தனித்துவம் மிக்க தலைவர்களில் ஒருவரானார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் வியட்நாமின் விடுதலைக்கான ஆதரவைத் திரட்டி விட்டு 1941 ஆம் ஆண்டில் தாய்நாட்டிற்குத் திரும்பிய ஹோ, இரண்டாம் உலகப்பெரும்போரின்போது வியட்நாம் உள்ளிட்ட இந்தோசீனப் பகுதியைக் கைப்பற்றியிருந்த ஜப்பானிய படைகளை விரட்டியடிக்க வியட் மின் என்ற கெரில்லா படைகளை நிகுயென் கியாப் – உடன் இணைந்து உருவாக்கினார்.

இரண்டாம் உலகப் போரின் முடிவுக்குப் பிறகு நேச நாடுகள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வியட்நாமை துண்டாடின. இதன் விளைவாக, வட வியட்நாமில் ஹனாய் ~ஐ தலைநகராகக் கொண்டு 1945 செப்டெம்பர் 2ஆம் நாள் உருவான வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் தலைவராக ஹோ தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் வாழ்நாள் முழுவதும் வடக்கு–தெற்கு ஆகிய இரண்டு வியட்நாம்களை ஒன்றிணைக்கப் பாடுபட்டார். மறுபுறத்தில், தெற்கு வியட்நாமை கைப்பற்ற வியட் மின் கெரில்லா படைகள் லாவோஸ், கம்போடியா எல்லைப் பகுதிகளில் முகாமிட்டு, படிப்படியாக கிராமங்களை தங்கள் வசமாக்கிக் கொண்டு வந்தனர். 1954 ஆம் ஆண்டில் டை பின் பூ என்ற இடத்தில், ஜெனரல் கியாப்–இன் விடுதலைப்படை, எதிரிகளின் மீது நம்புவதற்கு அரிய வகையில் தாக்குதல் தொடுத்து, பிரான்ஸ் நாட்டுப் படைகளை திக்குமுக்காடச் செய்து சரணடைய வைத்தது. இந்த வெற்றியின் மூலம் பிரான்ஸ் நாட்டின் ஆட்சி முற்றிலுமாக முடிவுக்கு வந்தது.

அதன்பிறகு, பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் எடுபிடியாக இருந்த தெற்கு வியட்நாம் அதிபர் இளவரசர் டியெம்~உம் ஒரு கட்டத்தில் படுகொலை செய்யப்பட, அதன் விளைவாக உருவான குழப்பமான சூழ்நிலையில், 1964ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமில் நிலை கொண்டதோடு, வட வியட்நாமின் மீது இடையறாது குண்டுகளை வீசி பேரழிவை ஏற்படுத்தி வந்தன.

அமெரிக்காவின் இத்தகைய இராணுவத் தாக்குதலை நிறுத்தி, இரண்டு வியட்நாம்களையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் தொடர்ந்து சர்வதேச அளவில் செயல்பட்டு வந்த ஹோ சி மின், 1969 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 அன்று உயிர்நீத்தார். அமெரிக்க ஏகாதிபத்திய இராணுவத்தை எதிர்த்த வியட் மின் கெரில்லா வீரர்களின் அயராத போராட்டங்களுக்குப் பிறகு, அவரது கனவு, இறுதியில் 1975 ஏப்ரல் 30 ஆம் திகதியன்றுதான் நனவானது. அமெரிக்காவின் இந்த வெறியாட்டத்தை எதிர்த்து உலகமெங்கும் குரல்கள் எழுந்தன. இந்தியாவிலும் ‘உன் பெயரும் என் பெயரும் வியட்நாம்!’ என்ற முழக்கம் எதிரொலித்தது. அமெரிக்காவிலும், இந்த வியட்நாம் போருக்கு எதிராக எண்ணற்ற நகரங்களில் இளைஞர்கள் அணிதிரண்டு போராடினார்கள். அமெரிக்காவின் ஏகாதிபத்திய நடவடிக்கையை கண்டித்த இவர்களில் பலரும் பின்னாளில் கம்யூனிஸ்டுகளாகவும் உருவெடுத்தார்கள் என்பதை, மறைந்த தோழர் மைதிலி சிவராமன் போன்றோரின் வாழ்க்கை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

அமெரிக்கப் படைகள் இறுதியில் தோல்வியுற்று, சைகோன் நகரை விட்டு காலி செய்த அன்றைய நிகழ்வை அவுஸ்திரேலிய பத்திரிக்கையாளரான டென்னிஸ் வார்னர் என்பவர் மிக அழகாகச் சித்தரித்திருந்தார்: “சைகோன் நகரத் தெருக்களில் வட வியட்நாம் படைவீரர்கள் அணிவகுத்துச் சென்றபோது, அங்கே கண்ணுக்குப் புலப்படாத ஒரு தலைவர் அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தார் என்பதைப் போலத்தான் தோன்றியது. அணிவகுத்து வந்த அந்தப் படை வீரர்களோ “ஹோ மாமா! நீங்களும் எங்களோடு அணிவகுத்து வருகிறீர்கள்!” என்ற புகழ்பெற்ற பாடலை பாடிக்கொண்டே வந்தார்கள்.”

மக்களின் ஆதரவோடு உலக ஏகாதிபத்தியங்களுக்கு சவால் விட்டு, இராணுவ ரீதியாக அவற்றைத் தோல்வியுறச் செய்த, புரட்சிகர வழிகாட்டியான தோழர் ஹோ சி மின் அவர்களின் நினைவிற்கு ‘மார்க்சிஸ்ட்’ இதழ் தன் அஞ்சலியை செலுத்துகிறது.

**செப்டெம்பர் 2: ஹோ சி மின் 80வது நினைவுதினம்**

நன்றி: மார்க்சிஸ்ட்

## ரஷ்யாவில் புற்றுநோய்க்கான தடுப்பூசி சோதனை வெற்றி

ரஷ்யா உருவாக்கி உள்ள புற்றுநோய்க்கான தடுப்பூசி விரைவில் சந்தையில் அறிமுகமாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. ரஷ்யா அரசின் அனுமதி கிடைத்ததும் இது சாத்தியமாகும்.

உயிர்க்கொல்லி நோய்களில் ஒன்றான புற்றுநோயால் ஆண்டுதோறும் உலக அளவில் கோடிக் கணக்கான பேர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்தச் சூழலில் புற்றுநோய்க்கான எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசியை (mRNA vaccine) உருவாக்கி உள்ளதாக ரஷ்ய நாட்டின் சுகாதாரத் துறையின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மைய (Radiology Medical Research Center of the Russian Ministry of Health) இயக்குநர் ஆண்ட்ரே கப்ரின் (Andrey Kaprin) கடந்த ஆண்டு இறுதியில் தெரிவித்திருந்தார்.

இந்த தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனையில், புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதை செலுத்தினால் கட்டி (Tumor) வளர்வதை தடுக்கப்படுவதை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். மேலும், இது பல கட்ட சோதனைகளுக்குப் பிறகு மனிதர்களிடத்திலும் சோதிக்கப்பட்டுள்ளது. அதற்கான செயல்திறன் 100 சதவீதம் துல்லியமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இது பயன்பாட்டுக்கு பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி ‘என்ட்ரோமிக்ஸ்’ (Enteromix) என அறியப்படுகிறது. ஏற்கெனவே ரஷ்யா உருவாக்கிய எம்.ஆர்.என்.ஏ (mRNA) கொரோனா தடுப்பூசி பணிகள் இந்த முயற்சிக்கு கைகொடுத்துள்ளது.

இந்த புற்றுநோய் தடுப்பு மருந்தை செலுத்தி மேற்கொண்ட சோதனையில் புற்றுநோய் கட்டிகள் அளவை குறைக்கவும், கட்டியின் வளர்ச்சியை தாமதப்படுத்தி உள்ளது என்பதையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

புற்றுநோய் தடுப்பூசி சார்ந்த மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆய்வுகள்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# முக்கிய சந்தர்ப்பங்களை தவறவிட்டுள்ள இலங்கை!




**மே**ற்கத்தைய உலகைச் சாராத உலகின் பெரும்பாலான நாடுகளின் தலைவர்கள் சமீபத்தில் சீனாவின் தியென்சின் நகரில் நடந்த சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organisation -SCO) உச்சி மாநாட்டிற்கும், ஜப்பானிய ஆக்கிரமிப்பை சீனா வென்றதன் 80ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சீனாவில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பிற்கும் சென்றிருந்தனர். இந்த இரண்டு நிகழ்வுகளிலும் இலங்கை கலந்து கொள்ளவில்லை.

கடந்த ஆண்டு ரஸ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற 'பிரிக்ஸ்' (BRICS) உச்சி மாநாட்டிலும் இலங்கை கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் அதில் உறுப்பினராகச் சேர்வதற்கு இலங்கை விண்ணப்பித்திருந்தது.

பிராந்திய அமைப்புகளின் உச்சி மாநாடுகளில் இருந்து இலங்கை விலகி இருப்பது, மீண்டும் கட்டியெழுப்பப்படும் அதன் பொருளாதாரத்திற்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்துவதோடு, இலங்கையின் வெளியுறவுக் கொள்கை இயந்திரத்தில் உள்ள ஒருங்கிணைப்புச் சிக்கலையும் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது, இலங்கை அரசாங்கத்தின் செய்தி தொடர்பாளர்கள் இவற்றில் இலங்கை பங்குபற்றாததிற்கு பல விளக்கங்களை அளித்துள்ளனர். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வேலைப்பளு காரணமாக சாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிற்குச் செல்லவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் கூறினார். அதேவேளை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அந்த மாநாட்டுக்கு தங்களுக்கு அழைப்பு வரவில்லை என்று கூறினார்!

பிரிக்ஸ் மற்றும் சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு இரண்டுடனும் அமெரிக்கா மிகவும் மோசமாக நடந்து கொள்ளும் நிலையில், அமெரிக்காவை வருத்தப்படுத்த விரும்பாமல் இருப்பதற்காக அந்த இரு மாநாடுகளிலும் இலங்கை கலந்து கொள்ளாமல் தவிர்த்தது என பெரும்பாலான இலங்கையர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்கா இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சந்தையாகும். இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 25 சதவீதம் அமெரிக்காவுக்கே செல்கிறது. இருப்பினும் வளர்ச்சி, முதலீடு மற்றும் மலிவான மூலதனத்தை எதிர்பார்க்கும் ஒரு நாடான இலங்கைக்கு இந்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது ஒரு இழப்பாகும்.

சாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் தலைவர்களும் அமைச்சர்களும் இணைப்பு, வர்த்தக வசதி, பணம் செலுத்துதல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒத்துழைப்பு போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

**ரதீந்திர குருவிட்ட**
**(Rathindra Kuruwita)**

இலங்கையின் மீட்சிக்கு நேரடிப் பொருத்தமுள்ள பல யோசனைகளை சீனாவும் முன்வைத்தது. சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மேம்பாட்டு வங்கியை விரைவுபடுத்துதல், இந்த ஆண்டு இரண்டு பில்லியன் யுவான் (சுமார் 281 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) மானியங்களை வழங்குதல் மற்றும் அடுத்த மூன்று ஆண்டுகளில் சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உள்ளக வங்கி கூட்டமைப்பு மூலம் 10 பில்லியன் யுவான் (சுமார் 2.81 பில்லியன் டொலர்கள்) கடன்களை வழங்குதல் என்பவையாகும் அவை.

இலங்கை சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் ஒரு உரையாடல் கூட்டாளியாக மட்டுமே இருந்தாலும் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவது முக்கியம். ஏனெனில், அது தகுதி விதிகளை வடிவமைக்கவும், பைலட் (விரைவு) திட்டங்களில் இடங்களைப் பெறவும், ஓரங்கட்டப்பட்ட ஒப்பந்தங்களை உருவாக்கவும் அனுமதிக்கும்.

தெற்காசிய முன்னறிவிப்பு வலையமைப்பின் மூத்த உறுப்பினரும், நிர்வாக இயக்குநருமான அசங்க அபேகுணசேகர, உச்சி மாநாடுகளின் போது கலந்துரையாடல்கள் மற்றும் தலைவர்களுடனான தனிப்பட்ட தொடர்புகள் மூலம் இலங்கை அதன் துறைமுக மற்றும் விமானப் போக்குவரத்து இணைப்புகளை விரைவுபடுத்தி, அதன் சுற்றுலா மற்றும் சேவை தொடர்புகளை வளர்த்திருக்க முடியும் என்று கூறினார்.

"இலங்கை அங்கு இல்லாதது வடிவமைப்பில் செல்வாக்கு செலுத்துவதற்கும், புதிய கருவிகள் தொடங்கப்படும் போது முதலிடத்தில் இருப்பதற்கும் வாய்ப்பில்லாமல் போகிறது" என்று அவர் கூறினார்.

"இலங்கை அமெரிக்காவுடன் வரி சம்பந்தப்பட்ட விவாதங்களில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா எங்கள் பங்குபற்றுதலை எதிர்மறையாக பார்க்கும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும், பாகிஸ்தான் அங்கே இருந்தது, மாலத்தீவு அங்கே இருந்தது, இந்தியா அங்கே இருந்தது" என்றும் அவர் கூறினார்.

"இலங்கை உலகளாவிய மற்றும் பிராந்திய அமைப்புகளில் இடம் பெறுவது அவசியம். அணிசேரா இயக்கத்தின் (NAM) தலைவராக அது எப்போதும் தனது சக்திக்கு மேல் செயல்பட்டு வந்திருக்கின்றது. உலகளாவிய அமைப்புகளில் நாம் இருக்க வேண்டும். நமது ஏற்றுமதியில்

ஏறத்தாழ 25 சதவீதம் அமெரிக்காவுக்குச் செல்வதால் நாம் அமெரிக்காவுடன் நல்ல உறவைப் பேண வேண்டும். ஆனால் அதேநேரம்

இத்தகைய உச்சி மாநாடுகள் வழங்கும் வாய்ப்பையும் இலங்கை புறக்கணிக்கக்கூடாது'' என அபேகுணசேகர கூறினார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு இலங்கைக்கும் சமமாக பயனுள்ளதாக இருந்திருக்கலாம். இலங்கை அதில் பங்குபற்றாமை சீனாவை வருத்தப்படுத்தியதாகத் தெரியவில்லை. செப்ரெம்பர் 8 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் (UNHRC) கூட்டத்தின் போது இலங்கையின் பாதுகாப்புக்கு சீனா மீண்டும் வந்தது. ஆனால் இலங்கை சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தவறியதால் பல அனுகூலங்களை இழந்துள்ளது.

சீனாவில் நடந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளாதது இலங்கையின் அணிசேரா கொள்கையின் பிம்பத்திற்கு விழுந்த ஒரு அடி என்றும், இணைப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தில் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை இழந்ததாகவும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபிர் ரஹ்மான் குறிப்பிட்டார்.

ஆனால் யதார்த்தம் இன்னும் குழப்பமானதாகவும், கவலையளிக்கும் விதத்திலும் இருப்பதாகத் தெரிகிறது. சாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டுக்கு சில தினங்களுக்கு முன்னர் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் அந்த அமைப்பு குறித்து பெருமையாகப் பேசினார். இருப்பினும் இலங்கை அந்த நிகழ்வுக்கு ஒரு சிறப்பு தூதரை கூட அனுப்பவில்லை. அது என்ன செய்தது? ஏன் செய்தது? என்பதை விளக்கும் ஒரு செய்திக் குறிப்பைக் கூட வெளியிடவில்லை. ஒரு வாரம் கடந்த பின்னரும் கூட அரசாங்கம் தெளிவான விளக்கம் எதனையும் வழங்கவில்லை.

பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு முன்னாள் இராஜதந்திரி நாட்டின் இந்த குழப்பமான நிலைக்குக் காரணம் அமெரிக்காவை சமாதானப்படுத்துவதற்கான முடிவிலிருந்து தோன்றியிருக்க முடியாது, மாறாக சில மூத்த அதிகாரிகள் அரசாங்கத்தின் செயற்பாட்டை கடினமாக்குவதில் ஆர்வமாக இருப்பதால்தான் என்று கூறினார்.

''சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு செயலகத்திலிருந்து வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைப்பு வரவில்லை என்ற கூற்றை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதை நான் தனிப்பட்ட முறையில் நம்ப முடியாமல் இருக்கின்றது. அழைப்பு அனுப்பப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. வெளியுறவு அமைச்சருக்கு ஏன் இந்தத் தகவல் கிடைக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்வது கடினம். அரசாங்கத்தின் செயல்பாட்டை கடினமாக்க சில அதிகாரிகள் தாமதப்படுத்துகிறார்கள் என்பதும் தெளிவாகிறது. இப்படியான அதிகாரிகள் இருந்தால் அரசாங்கம் என்ன செய்கிறது?'' என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இருப்பினும், இவை எதுவும் இலங்கை "மேற்கத்தைய சார்பு" பாதையில் சிக்கிக் கொண்டிருப்பதாக அர்த்தம் அல்ல. சீனாவுடனான உறவுகளில் எந்த இடையூறும் இருப்பதாகத் தெரியவில்லை. இழந்த உத்வேகத்தை மீட்டெடுக்கும் பொருட்டு பிரதமர் அடுத்த மாதம் சீனா செல்லவுள்ளார்.

இலங்கைக்கு ஒரு நெறிமுறை மற்றும் உச்சி மாநாடுகள் பிரிவு தேவை. இது அநேகமாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மற்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் 12 மாதங்களுக்குள் முக்கிய உலகளாவிய மன்றங்களைக் கண்காணிக்கவும், பிரதிநிதித்துவ நிலைகளை முன்கூட்டியே தீர்மானிக்கவும், முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகளை ஒருங்கிணைக்கவும், அழைப்புகள் மற்றும் வருகை குறித்த உண்மையின் ஆதாரமாக செயல்படவும் தேவை.

('சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையின் முக்கிய பகுதிகள்)

## ட்ரம்ப்பின் 50% வரிவிதிப்பால் இந்திய ஏற்றுமதிகளுக்குப் பெரும் பாதிப்பு

டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள இறக்குமதி வரிகளினால் விளையும் தாக்கம் குறித்து மக்களவையில் எழுத்துப்பூர்வமாகச் சமர்ப்பித்த விளக்கவுரையில், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா (Jitin Prasada), ஏறத்தாழ 48.2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள இந்திய ஏற்றுமதிப் பொருட்கள் இந்த புதிய வரிச்சுமையின் கடுமையான தாக்கத்திற்கு உள்ளாகும் என்று தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 7ந் திகதி முதல், குறிப்பிட்ட சில இந்தியப் பொருட்களுக்கு ட்ரம்ப் 25 சதவீத வரி விதித்தார். ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதால் உக்ரைன் போருக்கு இந்தியா மறைமுகமாக உதவுவதாக குற்றம்சாட்டி, கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தாவிட்டால் கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கப்படுமென ட்ரம்ப் அறிவித்தார். இதனை ஏற்க இந்தியா மறுத்ததால், ஓகஸ்ட் 27ந் திகதி முதல் கூடுதலாக 25 சதவீத வரி அமுலுக்கு வந்துள்ளது.

'இந்திய நாட்டின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதிலும், நமது உழவர்கள், உழைப்பாளர்கள், தொழில்முனைவோர், ஏற்றுமதியாளர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை சார்ந்தோருக்கும் முழுமையான ஆதரவை நல்குவதிலும் அரசு தனது அசைக்க முடியாத உறுதியுடனும் கவனத்துடனும் செயல்பட்டு வருகின்றது. ஏற்றுமதியை மேம்படுத்துதல், புதிய வர்த்தகக் கூட்டணி நாடுகளைக் கண்டறிந்து ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துதல் போன்ற பல்துறை உத்திகளைக் கையாண்டு, வர்த்தக ரீதியான எதிர்மறைத் தாக்கத்தைக் குறைக்க, அரசு அத்தியாவசியமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும். அமெரிக்காவின் இந்த வரிவிதிப்பு குறித்து அரசு தீவிரமாகக் கவனத்தில் கொண்டுள்ளது.' என்று அமைச்சர் ஜிதின் பிரசாதா மேலும் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கு நடுவே, ட்ரம்ப் 4 முறை இந்தியப்பிரதமர் மோடியை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சி செய்தார் எனவும், அவரது அழைப்பை மோடி ஏற்கவில்லையெனவும் மேற்கத்தைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவுடன் உரசல் ஏற்பட்ட நிலையில், நரேந்திர மோடி, 7 ஆண்டுக்கு பிறகு சீனாவுக்கு சென்றார். அங்கு நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்றார். அங்கு சீன அதிபர் ஜி ஜின் பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினை சந்தித்துப் பேசியுள்ளார்.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# நேபாளத்தில் நடந்தது நமக்கும் நடக்கலாம்!




தெற்காசிய நாடுகளில் நேபாளம் தனித்துவமானது. சிறிய நாடான பூட்டான் தேசத்துடன் நிலத்தால் சூழப்பட்டது நேபாளம். மற்றைய தென்னாசிய நாடுகளைப் போல ஆங்கிலேயர்களால் முழுமையாக காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தப்படாத நாடு. இருந்தாலும், அதன் புகழ்பெற்ற கூர்க்கா வீரர்கள் 1815ஆம் ஆண்டிலேயே பிரித்தானிய இராணுவத்தில் பணிக்கமர்த்தப்பட்டனர்.

நேபாளத்தின் சனத்தொகை 29.6 மில்லியன் ஆகும். அந்த நாடு ஏழ்மையில் இருந்தாலும், தனிநபர் வருமானம் 1447 அமெரிக்க டொலர்களாகும். நேபாளத்தில் அமைந்திருக்கும் இமயமலைப் பகுதி அழகான சுற்றுலாத்தலமாகும்.

நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராக நீண்டகாலம் மாவோயிஸ்ட் கொரில்லாக்களின் ஆயுதப் போராட்டம் நடந்தது. சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர் 2006இல் ஆயுதப் போராட்டம் கைவிடப்பட்டது. அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட முடிவுகளுக்கு இணங்க 2008 இல் மன்னராட்சி உத்தியோகபூர்வமாக ஒழிக்கப்பட்டது. அதன் பின்னர் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் "கூட்டாட்சி ஜனநாயக குடியரசு" என நேபாளம் பிரகடனம் செய்யப்பட்டது. (அதற்கு முன்னர் 2001இல் மன்னர் குடும்ப உறுப்பினர் ஒருவரால் மன்னர் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்)

அதற்கு முன்னதாக நாட்டில் பல இனப் பிரிவினைவாதக் கிளர்ச்சிகள் நடந்து வந்தன. அண்டை நாடுகள் ~ குறிப்பாக இந்தியா ~ நேபாளத்தில் இன மோதல்களைத் தூண்டி வந்தன. நேபாளம் உலகின் ஒரேயொரு இந்து ராஜ்யம் என கூறப்பட்ட போதிலும், இந்து ~ முஸ்லீம் மோதல்களும் நிலவின. மன்னராட்சி ஒழிக்கப்பட்ட பின்னர் இவையெல்லாம் ஓரளவு முடிவுக்கு வந்தன.

நேபாளத்தின் பிரதான வருவாய் சுற்றுலாத் துறையாகும். 2024இல் 147,567 சுற்றுலாப் பயணிகள் நேபாளத்துக்குச் சென்றுள்ளனர். இமயமலையின் பல்வேறு தோற்றப்பாடுகளைக் கண்டு களிக்கவே பலர் நேபாளத்துக்கு வருகின்றனர்.

ஆனால் இளைஞர்கள் மத்தியில் இயற்கை காட்சிகளைக் கண்டுகளிக்கும் மனநிலை இருக்கவில்லை. அதற்கு காரணம் வேலையில்லாத் திண்டாட்டமும், வாழ்க்கைச் செலவும், ஊழலும், அதன் காரணமாக வறுமையும் நாட்டில் அதிகரித்து வந்ததுதான்.

அதன் காரணமாக செப்ரெம்பர் 9ஆம் திகதி "ஜெனரேசன் இஸட்" என்ற அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் தலைநகர் காத்மாண்டு வீதிகளில் இறங்கி கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். அதன்போது, கிளர்ச்சியைத் தடுக்க முயன்ற பொலிசாருடன் இளைஞர்களுக்கு மோதல் ஏற்பட்டது.

**காமினி அக்கீமன**
**(Gamini Akmeemana)**

இந்தக் கிளர்ச்சிக்கு ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சில சமூக ஊடகங்களை அரசாங்கம் தடை செய்ததும் ஒரு காரணமாக அமைந்தது.

இந்தக் கிளர்ச்சிகளின் போது பிரதமரின் வீடு உட்பட பல பொதுக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கிளர்ச்சியை அடக்குவதற்காக இராணுவம் சுட்டதில் 19 பேர் வரை கொல்லப்பட்டனர்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போனதால் பிரதமர் கட்கா பிரசாத் ஒலி பதவி விலகினார். சமூக ஊடகங்கள் மீதான தடையையும் அரசாங்கம் நீக்கியது. ஆனாலும் போராட்டங்கள் நிற்கவில்லை.

காரணம், பிரதான பிரச்சினை சமூக ஊடகங்கள் மீதான தடை மாத்திரமல்ல. பல தென்னாசிய நாடுகளைப் போலவே நேபாளத்திலும் வறுமையும், ஊழலும், அதிகார துஸ்பிரயோகமும் எங்கும் வியாபித்திருந்ததால், இளைஞர்கள் தமது எதிர்காலம் குறித்து அச்சமடைந்திருந்தனர்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையும் வறுமைக்கெதிரான பல கிளர்ச்சிகளைச் சந்தித்துள்ளது. "பிரிவினைவாதப் போர்" என்று அழைக்கப்படும் விடுதலைப் புலிகளின் போரைக்கூட, சிங்கள ~ தமிழ் ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்கத்திற்கு எதிரான ஏழைகளின் நடவடிக்கையாக விளக்கலாம். தென்னிலங்கையில் நடத்தப்பட்ட கிளர்ச்சிகளும் முக்கியமாக ஏழைகளால் நடத்தப்பட்டன. 2022இல் நடத்தப்பட்ட கிளர்ச்சியில் இறுதியில் நடுத்தர வர்க்கத்தினரும் கலந்து கொண்டனர்.

பொதுத்துறை வேலை ஒதுக்கீடுகள் சம்பந்தமாக பங்களாதேஸ் அரசாங்கம் 2018இல் விடுத்த சுற்றறிக்கையை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்கிய பின்னர், பாகுபாட்டிற்கு எதிராக 2024 யூன் மாதம் பங்களாதேஸ் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, இறுதியில் அரசாங்கத்தைத் தூக்கி எறிந்தனர்.

இந்திய துணைக்கண்டம் முழுவதும் இத்தகைய நிலைமையைக் காணலாம். ஆனால் இந்தியா இதற்கு விதிவிலக்காக இருந்தது. காரணம், நிறைய சமத்துவமின்மை, வறுமை, ஊழல், இளைஞர்களின் விரக்தி என்பன இந்தியாவில் இருந்தாலும், அதன்

பொருளாதாரம் பலருக்கு வேலைகளை வழங்கும் அளவுக்குப் பெரியது.

இந்தியாவையும் நேபாளத்தையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், 2023–24இல் இந்தியாவில் வேலையற்றவர்களின் வீதம் 10.2 ஆக இருந்தது. அதே நேரத்தில் 2022~23 காலத்தில் நேபாளத்தின் வேலையற்றோர் வீதம் 22.7 ஆக இருந்தது.

சுமார் 6 மில்லியன் நேபாளிகள் வெளிநாடுகளில் வேலை செய்கிறார்கள். 2023~24 காலகட்டத்தில் 741,000 வரையான நேபாளிகள் வெளிநாடுகளில் வேலை தேடி நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர்.

2021 இல் எடுத்த ஒரு புள்ளி விபரத்தின்படி, 3.1 வீதமான நேபாளிகள் கார் வைத்திருக்கின்றனர். பெரும்பான்மையானவர்கள் மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மிதிவண்டிகள் வைத்திருக்கின்றனர்.

பணக்கார நேபாளிகளின் ஆடம்பர வாழ்க்கை முறைகள், வீடுகள், கார்கள், விடுமுறைக் கொண்டாட்டங்கள் என்பன பற்றிய காட்சிகள் சமூக ஊடகங்களில் நிரம்பி வழிகின்றன.

நேபாளம் பெரும்பாலும் ஒரு விவசாய நாடு. சேவைத்துறை இரண்டாவது இடத்திலேயே உள்ளது. அதன் அண்டை நாடுகளான சீனா மற்றும் இந்தியா போல நேபாளத்தில் தொழில் வளர்ச்சியோ, தொழில்நுட்ப வளர்ச்சியோ இல்லை. அதனால் செல்வச் செழிப்பு குறைவாகவே உள்ளது.

நேபாளத்தில் அரசியல் ரீதியாகச் சலுகை பெற்ற உயர் வகுப்பினர் சனத்தொகையில் ஒரு சிறு பகுதியினர் ஆவர். ஆனால் இவர்கள் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்வை சனத்தொகையில் பெரும்பான்மையினரான – குறிப்பாக இளைஞர்கள் – தமது ஏழ்மையான வாழ்க்கையுடன் நிச்சயமாக ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். உயர் குழாமினரின் வாழ்க்கைக்கும் தமது வாழ்க்கைக்கும் இடையிலான இடைவெளியை கண்டு கொள்ளும் அவர்கள் மனதில் கவலையும் கோபமும் ஏற்படுவது இயல்பானது.

இங்கே நமக்கும் ஒரு பாடம் உள்ளது. பல்வேறு அரசியல் வாக்குறுதிகளுடன் நமது நாட்டின் அமைதியின்மை தற்போது கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் ஆடம்பர வாழ்க்கை முறையையும் இளைஞர்கள் அறிவர். அவர்கள் மற்றொரு தேர்தலுக்காக, மற்றொரு ஐந்து வருட சுற்றுக்காக காத்திருக்க மாட்டார்கள். அவர்கள் முடிவுகளை விரைவில் எதிர்பார்க்கிறார்கள்.

அவர்கள் இப்பொழுது நேபாளத்தில் என்ன நடக்கிறது என்பதையும் அவதானிக்கத் தவற மாட்டார்கள்.

('டெயிலி மிரர்' பத்திரிகையில் (செப்ரெம்பர் 10 – 2025) வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்)

# மனித நேயத்திற்கு சாவுமணி

இஸ்ரேல், காஸாவில் 'இன அழிப்புச் செயல்களில்' ஈடுபட்டுள்ளதென 16.09.2025 அன்று வெளியாகிய ஐ.நா.வின் அறிக்கை உறுதிப்படுத்தியிருக்கிறது. ஒரு இன மக்களைக் கொல்வது, கடுமையான உடல் மற்றும் மனக்காயங்களை ஏற்படுத்துவது, வாழும் நிலைமைகளை வேண்டுமென்றே அழித்து பஞ்சம் ஏற்படுத்துவது, பிறப்பைக் கூடத் தடுக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட கொடூரங்கள் அரங்கேற்றப் பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் ஐ.நா.வின் 1948 ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட அழிப்புச் செயல்கள். ஐ.நா.விசாரணை ஆணையத்தின் தலைவர் நவி பிள்ளை "காஸாவில் உள்ள பலஸ்தீனர்களை அழிக்கும் நோக்கம் தெளிவாக உள்ளது" என்றும் உறுதிப்படுத்தியிருக்கிறார். இது ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல. இது ஒரு திட்டமிடப்பட்ட அழிப்பு!

ஒரு காலத்தில் வீடுகளாக இருந்தவை இன்று இடிபாடுகளின் குவியல்களாக மாறிவிட்டன. இஸ்ரேல் இராணுவம் இதுவரை காஸாவில் 65,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்களை கொன்று குவித்திருக்கிறது. 90 சதவிகித வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பள்ளிவாசல்கள், மருத்துவமனைகள்,




பாடசாலைகள் என எதுவும் மிஞ்சவில்லை. காஸாவில் உள்ள சுமார் 22 இலட்சம் மக்கள் தினமும் குண்டுவீச்சு, உணவுப் பற்றாக் குறை, தண்ணீர் இல்லாமல் மரணத்தின் நிழலில் வாழ்கிறார்கள். இது எப்படி ஒரு 'தற்காப்பு நட வடிக்கை'யாக இருக்க முடியும்? இது ஒடுக்கு முறையின் உச்சம்!

இஸ்ரேல் சர்வதேசச் சட்டங்களை தொடர்ந்து மீறுகிறது. 28 ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மீறியது, நான்காவது ஜெனீவா ஒப்பந்தத்தை மீறியது, மேற்குக் கரையில் சட்டவிரோதக் குடியேற்றங்களை அமைத்தது – இவை அனைத்தும் சர்வதேச விதிகளை இஸ்ரேல் மதிக்கவில்லை என்பதற்கான சான்றுகள். இப்போது, "முழு காஸாவையும் ஆக்கிரமிப்போம்" என்று பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அறிவித்திருப்பது, இந்த ஆக்கிரமிப்பின் உச்சகட்டம்.

இஸ்ரேலிய நிதி அமைச்சர் பெஸலேல் ஸ்மோட்ரிச் (Bezalel Smotrich) காஸாவை "முற்றிலுமாக அழிக்க வேண்டும்" என்றும், பலஸ்தீனர்களை "முழுமையான விரக்திக்கு"ஆளாக்கி வெளியேறும்படி கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் கூறியிருப்பது, அவர்களின் உண்மையான நோக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இது ஒரு இனவெறி மனப்பான்மையின் வெளிப்பாடு. இவ்வளவிற்குப் பின்பும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்கி இனஅழிப்பை நேரடியாக ஆதரிக்கிறது. அதோடு, ஐ.நாவில் தனக்கிருக்கும் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இஸ்ரேலை பாதுகாக்கிறது.

ஐ.நா.வின் வலுவான அறிக்கை, சர்வதேச சமூகத்திற்கு ஒரு அறைகூவல் விடுத்துள்ளது. இப்போது நடவடிக்கை எடுக்கத் தவறினால், வரலாறு நம்மை மன்னிக்காது. இஸ்ரேலின் இந்த அட்டூழியத்தை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருப்பது, நாமும் அதற்கு உடந்தையாக இருக்கிறோம் என்று அர்த்தம். மனிதநேயம் இன்னும் உயிர்ப்புடன் இருந்தால், அது காஸாவின் அழுகுரலுக்கு உலகநாடுகள் செவிசாய்க்க வேண்டும்.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

அனுமதிக்கப்பட்டிருந்த தனது தாயாரைப் பார்க்க அரச வளங்களைப் பயன்படுத்திச் செய்றதும் குற்றம் அல்லவா? அதற்காக அவரையும் கைது செய்து சிறையில் அடைக்குமா அரசாங்கம்?

அரசாங்கம் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதன் நோக்கம் அது சொல்வது போல ஊழலை ஒழிப்பது அல்ல. மக்கள் மத்தியில் தனது ஆட்சிக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கு சரிவை திசை திருப்பி விடுவதே அதன் நோக்கமாகும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கு பல விதமான வாக்குறுதிகளை வழங்கியது. அவை எதுவும் நிறைவேற்றப்படாததால், அவை மக்களை ஏமாற்றி வாக்குப் பெறுவதற்காக சொல்லப்பட்ட பொய் வாக்குறுதிகள் என்பதை மக்கள் இனம் கண்டுள்ளனர்.

அதனால்தான் கடந்த வருடம் நடந்த பொதுத்தேர்தலில் மக்கள் ஆதரவால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற அரசாங்கம், பின்னர் சில மாதங்களில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின் போது தனக்கு பொதுத்தேர்தலில் கிடைத்த வாக்குகளில் 20 இலட்சத்தை இழந்தது. இந்த இழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்ற பயத்தின் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்தாது அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றது.

2029இல் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர் நிச்சயம் தோல்வியடைவார் என்பதைக் கண்டு கொண்ட அரசாங்கம், அதைத் தடுப்பதற்காக ஊழல் ஒழிப்பு என்ற போர்வையில் தனக்கு எதிரான அரசியல் சக்திகளை வகைதொகையில்லாமல் கைது செய்து பழிவாங்கி வருகின்றது.

நீதித்துறையிலும், பொலிஸ்துறையிலும், நிர்வாகத்துறையிலும் தாம் தலையிடுவதில்லை, அவை சுதந்திரமாக இயங்கி வருகின்றன என அரசாங்கம் சொல்லிக் கொண்டாலும், அவற்றின் சகல செயல்பாடுகளையும் அரசாங்கமே நெறிப்படுத்தி வருகின்றது என்பதற்கு போதிய அத்தாட்சிகள் உள்ளன.

அதற்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவதற்கு முந்தைய தினம் ரணில் விக்கிரமசிங்க அடுத்த நாள் நிச்சயமாக கைது செய்யப்படுவார் என அரசாங்கத்துக்கு நெருக்கமான ஒருவர் சமூக ஊடகமொன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்தார். பின்னர் அவர் கூறியபடியே ரணிலின் கைது நடந்தது. ரணில் கைது செய்யப்படுவது அரசாங்கத்தின் சகாவுக்கு முன்கூட்டியே எவ்வாறு தெரிந்தது? இன்றுவரை அதற்கு விடை இல்லை. அந்த நபர் விசாரணை எதுவுமின்றி சுதந்திரமாக வெளியே உலவித் திரிகிறார்.

ஆனால், அரசாங்கம் போடும் கணக்குகள் தவறாக முடிவதுடன், எதிர்பாராத ஆபத்தான விளைவுகளையும் உருவாக்கப் போகிறது என்பது அரசாங்கத்திற்கும் தெரியும். தாம் மேற்கொள்ளும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் தம்மையே இறுதியில் திருப்பித் தாக்கும் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

நாட்டு மக்கள் தமக்கு எதிராகத் திரும்பி வருகிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்ததால்தான், அரசாங்கம் மக்களை நம்புவதை விடுத்து, பொலிசார், குற்றப்புலனாய்வுத்துறை, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் என்பனவற்றின் மீது அதிக நம்பிக்கை வைத்து செயல்பட்டு வருகிறது.

அடுத்த 20 முதல் 30 வருடங்கள் வரை தாம் ஆட்சியில் இருப்பது அவசியம் என, அரசாங்கத்தின் தலையாய கட்சியான ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறி வருகிறார். இதன் அர்த்தம் இந்த அரசாங்கத்தின் கீழ் தேர்தல்கள் எதுவும் வருங்காலத்தில் நடைபெறாது என்பதுதான்.

போர் நடைபெற்ற காலத்தில் கூட தேர்தல்கள் நடைபெற்ற இந்த நாட்டில், சமாதானத்தையும் தேசிய நல்லிணக்கத்தையும் கொண்டு வந்ததாக தம்பட்டமடிக்கும் ஒரு அரசாங்கம், ஜனநாயகத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றான தேர்தல்களை இல்லாதொழிக்க எடுக்கும் முயற்சிகளை அனுமதிப்பதா இல்லையா என்பதை நாட்டு மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

வெற்றிகரமாக முடிந்துள்ளதாகவும், இது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் ரஷ்ய நாட்டின் மத்திய மருத்துவ மற்றும் உயிரியல் அமைப்பின் (Russian Federal Medical-Biological Agency) தலைவர் வெரோனிகா (Veronika Skvortsova) கூறியுள்ளதாக ரஷ்ய செய்தி நிறுவனமான டாஸ் (TASS) தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இந்த புற்றுநோய் தடுப்பூசிக்கு அந்த நாட்டின் மருத்துவ துறை அனுமதி அளிக்க வேண்டி உள்ளது. அந்த அனுமதி கிடைத்தும் இது சந்தையில் பயன்பாட்டுக்கு வரும். அப்போது இதை உலக அளவிலான ஆய்வாளர்கள் பகுப்பாய்வு செய்வார்கள். அது மருத்துவ துறையின் வளர்ச்சியில் பலன் தரும் என நம்பப்படுகிறது.

அண்மையில் சீனா சென்ற போது ரஷ்ய அதிபர் புட்டின், மனிதர்கள் 150 ஆண்டுகள் வரை வாழும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துள்ளது என்று சீன அதிபர் ஜி ஜின்பிங் உடன் பேசி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

நிதியுதவி பெறும் ஹமி நேபாள் (Hami Nepal) போன்ற அமைப்புகளும் நேபாளத்தில் தீவிரமாக செயல்படுகின்றன.

இவை அனைத்திற்கும், வன்முறை மயமாக்கப்பட்ட போராட்டத்திற்கும் தொடர்பும், பங்கும் இல்லாமல் இல்லை என்பதை பல தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

“உங்கள் வீட்டை நீங்கள் சுத்தமாக வைத்திருக்காவிட்டால், முதலில் எறும்புகள் வரும் பின்னர் பூச்சிகள் வரும் கடைசியில் கொடிய பாம்புகள் படையெடுக்கும்” என்கிறது ஒரு இலத்தீன் அமெரிக்கப் பழமொழி. அதுதான் இப்போது நேபாளத்தில் நடந்தது.

**தகவல் ஆதாரங்கள்: நேபாள ஊடகங்கள், பீப்பிள்ஸ் டெஸ்பாட்ச், தி வயர், ஏசியன் மார்க்சிஸ்ட் ரெவியூ**

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

இதேவேளையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் பங்கேற்ற ட்ரம்ப், ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது 50 முதல் 100 சதவீதம் வரை வரி விதிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

# மறக்கப்பட்டுவிட்ட மாகாண சபை தேர்தல்

மாகாணங்களின் நிதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற விடயங்கள் குறித்து விவாதிக்க ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மாகாண ஆளுநர்கள் மற்றும் செயலாளர்களைச் சந்தித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னர் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான அனுர குமார திசாநாயக்க மாகாண சபைகளின் ஆளுநர்களைச் சந்தித்திருக்கிறார்.

உண்மையில் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக்கு முந்தைய கலந்துரையாடல்களில் மாகாண முதலமைச்சர்களைச் சந்தித்திருக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் உண்மையில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகள். அவர்கள் அரசு சொல்வதைச் செய்பவர்கள்.

ஆனால் எட்டு ஆண்டுகளாக மாகாண சபைகள் தேர்ந்தெடுக்கப்படாமல் உள்ளன. அதனால் மாகாண முதலமைச்சர்கள் என்று யாரும் இப்பொழுது இல்லை. அதனால் ஜனாதிபதி தற்போது மாகாண ஆளுநர்களை மட்டுமே சந்திக்க முடியும்.

2014ஆம் ஆண்டு நடைபெற்ற கடைசி மாகாண சபைத் தேர்தலுக்குப் பிறகு நாட்டில் பல்வேறு வகையான எட்டுத் தேர்தல்கள் நடந்துள்ளன. மேலும், நாட்டில் ஐந்து அரசாங்கங்களும் (2024 இல் தேசிய மக்கள் சக்தி அமைத்த இடைக்கால அரசாங்கம் உட்பட) ஐந்து ஜனாதிபதிகளும் இருந்துள்ளனர். இருந்தும் மாகாண சபைத் தேர்தல்கள் எப்பொழுது நடைபெறும் என யாராலும் ஊகிக்க முடியாதுள்ளது.

தனது கட்சியின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு தனது அரசாங்கம் மாகாண சபைகளை அரசியல் கருவியாகப் பயன்படுத்தாது என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கூறியிருக்கிறார். ஆனால் அதற்கு முரண்பாடாக அவர் நியமித்த ஆளுநர்களை மாகாண சபைகள் மீது கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்குப் பயன்படுத்துகிறார்.

மூன்று வருட தாமதத்திற்குப் பிறகு மே 2025இல் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் வரை, ஜனாதிபதிகள் அரசாங்கத்தின் மூன்று அடுக்குகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்கு மேலதிகமாக அவர்கள் தமது கட்சியின் மூலம் நாடாளுமன்றத்தையும், ஆளுநர்கள் மூலம் மாகாண சபைகளையும், மாகாண ஆளுநர்களின் கீழான சிறப்பு ஆணையர்கள் மூலம் உள்ளூராட்சி சபைகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.

2017 ல் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ‘நல்லாட்சி’ அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து, தேர்தல்களை காலவரையின்றி ஒத்தி வைத்ததிலிருந்து, இந்த மாகாண சபைகள் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் கீழேயே இருந்து வருகின்றன.

அந்த நோக்கத்திற்காக நல்லாட்சி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்த) சட்ட மூலத்தை ஜே.வி.பி. உட்பட எதிர்க்கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கவில்லை. உண்மையில், அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்ற அவர்கள் நல்லாட்சி அரசாங்கத்துக்கு உதவினார்கள்.

மறுபக்கத்தில், பொதுஜன பெரமுன அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை. அத்துடன் தோல்விப் பயம் காரணமாக உள்ளாட்சித் தேர்தலையும் ஒத்தி வைத்தது. இவ்வருடம் மே 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்தது. ஆனால் அதன் பின்னர் அந்த உறுதிமொழி குறித்து அமைதியாக இருந்து வருகிறது.

ஜனாதிபதி மாகாண ஆளுநர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் அபிவிருத்தித் திட்டங்களை சுமூகமாக முன்னெடுக்க அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் இடையே நெருக்கமான ஒருங்கிணைப்பின் அவசியத்தை வலியுறுத்தினார். மாகாண சபைகள் அவரால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களால் நிர்வகிக்கப்படுவதால் அத்தகைய அழைப்பை அவர் செய்ய வேண்டிய அவசியமில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபைகளை அனைத்து நோக்கங்களுக்காகவும் இயக்குகிறது. தாமதமாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டால் நிலைமை மாறக்கூடும்.

அமைச்சரவைக் கூட்டமொன்றுக்குப் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்த கேள்வியொன்றுக்கு அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஒரு மழுப்பலான பதிலைக் கூறினார். மாகாண சபைத் தேர்தல்களுக்கான காலக்கெடுவை தன்னால் கூற முடியாது என்றும், ஆனால் அவை நடக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒருவேளை, உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சந்தித்த கணிசமான பின்னடைவு அரசாங்கத்தை மாகாண சபைத் தேர்தல்களை மேலும் தாமதப்படுத்தத் தூண்டியிருக்கலாம். உள்ளாட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்றிருந்தால், அதன் பிறகு உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருக்கும் என்று நம்புவதற்குக் காரணம் உள்ளது.

அரசாங்கம் எப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்தப் போகிறது என்பதை அறிவிப்பது அவசியம். உண்மைதான், மாகாண சபை அமைப்பு ஒரு வெள்ளை யானையாக மாறிவிட்டது. அரசாங்கம் மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டும் அல்லது அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதா அல்லது அகற்றுவதா என்பதை முடிவு செய்ய வேண்டும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் சரியாகவே கூறியுள்ளனர்.

(‘த ஐலன்ட்’ பத்திரிகையின் செப்ரெம்பர் 13ஆம் திகதிய ஆசிரிய தலையங்கத்திலிருந்து)